# அனல்

புதுமலர்: 11 இதழ்: 05 புரட்டாதி - ஐப்பசி

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

ஆவியிலே அனலாயிருங்கள்

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

- ரோமர் 12:11 -

ஆசிரியர்:
வே.மகாராஜா

சீயோன் தேவாலயப் பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

01.09.2014

# பொருளடக்கம்


- அனலின் குரல்
- கதையும் கற்றதும் - எமக்காக கொடுத்தார்
- வாலிபர் வளாகம் - இளைஞரே மூப்பருக்கு கீழ்ப்படியுங்கள்
- தண்ணீர் திராட்சை ரசமானது
- பெண்கள் பக்கம் - உப்பில்லா பண்டம் குப்பையிலே
- நற்செய்திப்பகுதி - உருவம் கொடுத்தவரை ஏன் உதறித்தள்ளுகிறாய்?
- பக்தர்களின் பயிலகம்
- குறுக்கெழுத்துப் போட்டி - 63
- காவலாளி இல்லாத வீடு
- அருட்பணியாளர் சரிதை - ச.பரமானந்தம்ஐயர், தேவசகாயம்பிள்ளை
- வினா விடை - 65
- அனலின் ஆன்மீக விருந்து


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

## எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
347, Navalar Road,
Jaffna, Srilanka.


**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**


The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

ஆசிரியர் "அனல்",
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்,
உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

# அனலின் குரல்

**சகல மகிமைக்கும் பாத்திரராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!.**

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து கெட்டுப்போனதாக பரிசுத்த வேதாகமம் காண்பிக்கவே இல்லை. அதே போல தங்கள் வாழ்க்கையில் அந்த இயேசுவை விசுவாசிப்பதினால் கெட்டுப்போகிறவர்கள் இருக்கவே முடியாது. ஏனெனில் தேவனுடைய ரூபமாயிருந்தும் அவர் பூமிக்கு வந்ததே மனிதனை வாழ வைப்பதற்காகவே.

உன் வாழ்வில் உனக்குத் தெரியாமல் நீ இழந்த ஒன்றை உனக்குத் தருவதற்காகவே இயேசு கிறிஸ்து மனிதனாக வந்தார். **லூக்கா 19:10இல் ஆண்டவர் கூறினார்: இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்.** ஆம் மனிதன் தன்னை உண்டாக்கியவரை விட்டுவிட்டான். இது தான் இழப்புக்களில் பெரிய இழப்பு!. ஆனால் அவரே மனிதனைத் தேடி வந்திருக்கிறார். உன்னைத் தன்னுடன் இணைப்பதற்காக, உன் பாவங்களை மன்னிப்பதற்காக, உன்னை தன்னுடன் இணைப்பதற்காகவே!.

**அருமையானவர்களே ஆண்டவர் இயேசு கொடுக்கும் இரட்சிப்பு நீ இழந்த சமாதானத்தை, நிம்மதியை, விடுதலையை, சுகத்தை தரும். அவரை விசுவாசி! ஏற்றுக்கொள்! அவர் உன்னை ஆசீர்வதிப்பார்.**

– ஆசிரியர் –

# கதையும் கற்றதும்...



## எமக்காக கொடுத்தார்!

அன்றும் வழமை போன்று வைத்தியசாலை சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. சிற்றூழியர்கள் வளாகத்தை துப்புரவு செய்து கொண்டிருக்க, எப்போதும் போலவே நோயாளிகளின் முனகல் சத்தம் அந்த இடத்தை பரிதாபமாக்கிக் கொண்டிருந்தது. ஆங்காங்கே நோயாளர்களின் உறவுகள் ஏக்கப்பார்வைகளோடு நின்று கொண்டிருந்தார்கள். தாதியர் நோயாளர் அறிக்கைகளை கைகளில் ஏந்தியவர்களாய் அவர்களை கவனித்துக் கொண்டிருக்க, தவறாமல் சுற்றும் கடிகாரம் போன்று வைத்தியர்கள் தவறாமல் நோயாளர்களை பரிசோதித்துக் கொண்டிருந்தனர்... இது வழமையாக வைத்தியசாலையில் நடைபெறும் நிகழ்வு தான். அவ் வைத்தியசாலையில் பொறுப்பு வைத்தியராக நிமலன் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். அவருக்கு ஒரே மகன். மிகவும் செல்லமாக அவனை வளர்த்து வந்தார். அவருக்கு அவன் தான் எல்லாமே. அவர் வைத்தியராக இருந்தும் அவருடைய செல்லப்பிள்ளையாகிய மகன் அவரது உயிரைப்போலவே இருந்தான். அவனுக்காகவே அவர் வாழ்ந்து வந்தார் என்றே சொல்லலாம். இப்படி இருக்கும் போது ஒரு நாள் பாடசாலை விடுமுறையைக் கழிப்பதற்காக அவருடைய மகனும் பாடசாலை மாணவர்களுமாக சுற்றுலா ஒன்றுக்காக சென்றார்கள். அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக செல்லும் வேளையில் எதிர்பாராத விபத்தில் அவர்களது வாகனம் சிக்கிக் கொண்டது.

அவ் விபத்தில் அவரது மகன் தான் மிகவும் படுகாயமடைந்தவனாக வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டான். இதனைப் பார்த்த நிமலன் டொக்டர் அதிர்ந்து போனார். சத்திரசிகிச்சைக் கூடம் இயந்திர வேகத்தில் இயங்கத் தொடங்கியது. நிமலன் டொக்டர் தனது அனுபவங்களை வைத்துக் கொண்டு மகனுக்கு சிகிச்சை அளிக்கத் தொடங்கினார். ஏனைய மருத்துவர்களும் தாதியரும் வந்து அவருக்கு உதவி செய்து கொண்டிருந்தார்கள். அவனுக்கு இப்போது செயற்கை சுவாசம் அளித்துக் கொண்டிருந்தார்கள். அவன் மிகவும் மிகவும் அவசர நிலையிலேயே இருந்தான்.

அப்போது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் இருந்து அவசர அழைப்பொன்று அவருக்கு வந்தது. 'டொக்டர் விபத்தில் சிக்கி படுகாயமடைந்தவனாக ஒரு சிறுவன் கொண்டு வரப்பட்டிருக்கிறான், அவனுக்கு சிகிச்சையளிக்க வேண்டும்" நிமலன் டொக்டருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. தன்னுடைய மகனை காப்பாற்றுவதற்காக சிகிச்சையளிப்பதா? அல்லது தன் மகனைப் போன்று உயிருக்காய் போராடிக் கொண்டிருக்கும் மற்றைய சிறுவனை காப்பாற்ற செல்வதா? என்ற போராட்டம் எழுந்தது. ஆனாலும் தன்னுடைய மகனைப் பார்க்கிலும் மற்றைய சிறுவனின் உயிரே அவருக்கு பெரிதாக தெரிந்தது. உடனே டொக்டர் சொன்னார்: சரி... சரி.... சிகிச்சைக்காய் ஆயத்தப்படுத்துங்கள்! உடனே வருகின்றேன்! என்று சொல்லிவிட்டு உடனடியாக தன் மகனுடைய காரியங்களை விட்டுவிட்டு வெளிநோயாளர் பிரிவிற்கு கிளம்பினார்.

ஆனால் இங்கே வைத்தியாசலையில் காயமடைந்தவனாய் தன்னுடைய மகனைக் கொண்டு வந்த தகப்பன், வைத்தியர் எங்கே? வைத்தியர் எங்கே? என்று அலறி அடித்தவருக்கு வைத்தியர் வரவேண்டும் என்ற பதில் தாதி ஒருத்தியால் கூறப்பட்டது. இதனைக் கேட்டவருக்கு பயங்கர கோபம் வந்தது. உடனே வைத்தியரை திட்ட ஆரம்பித்தார். அந்த தகப்பன் தன் மகனைக் காப்பாற்றுமாறு கெஞ்சினார். இதனைக் கேட்ட வைத்தியர் எதுவும் பேசாமல் சிறிது நேரத்தின் பின்: என்னால் எதுவும் சொல்ல முடியாது. கடவுளை வேண்டிக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு சத்திரசிகிக்சை கூடத்திற்குள் நுழைந்தார். இதனைக் கேட்ட அந்த தகப்பன் இன்னும் அதிகமாய் திட்டினார்: வைத்தியசாலைக்கு வந்ததே நேரம் பிந்தி. அதற்குள் கடவுளை வேண்டிக் கொள் என்றுவிட்டுச் செல்கின்றாரே என்று இன்னும் அதிகமாய் திட்டினார்.

உள்ளே சென்ற வைத்தியர் இந்த சிறுவனை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று முழுமுயற்சியுடன் போராடி சிகிச்சை செய்தார். ஆம்! அந்த போராட்டத்திற்கு வெற்றியும் கிடைத்தது, சிறுவன் உயிர்பிழைத்தான். சிகிச்சை முடிந்து வைத்தியர் வெளியே வந்தார். வந்தவரிடம் அந்த தகப்பன் ஓடிச்சென்று ஐயா! எனது மகனுக்கு எப்படி என்று கேட்க, டொக்டர் சொன்னார்: எல்லாவற்றையும் தாதி சொல்லுவார் என்று சொல்லிவிட்டு தன் மகனிற்குரிய சிகிச்சையளிக்க வேண்டுமே யென்ற நினைவுடன் கண்ணீரோடு உடனே சென்றுவிட்டார். இதனைக் கேட்ட அந்த தகப்பன்: இந்த வைத்தியர் வந்ததே லேட், அதற்குள் இவருக்கு கதைக்க பேசவும் தெரியாது. பெருமையுடன் செல்கின்றாரே என்று பேசிக்கொண்டிருக்கும் போது சத்திரசிகிச்சை அறைக் கதவைத் திறந்து தாதி அழுது கொண்டு வெளியே வந்தாள். வந்தவள் அந்த தகப்பனிடம் ஐயா, எவ்வளவு நல்ல வைத்தியரை இப்படித் திட்டுகின்றீர்களே! என்று கேட்டாள். அதற்கு அந்த தகப்பன் நான் அவரை திட்டியது சரி, ஏன் நீங்கள் இப்படிக் கூறுகின்றீர்கள் என்றார்: அதற்கு அந்த தாதி கூறினாள்: ஐயா! உங்கள் மகனின் வயதை உடைய வைத்தியருடைய ஒரே ஒரு மகனுக்கு நேற்றைய தினம் இதே போன்றதொரு விபத்தில் காயமடைந்தான். சிகிச்சை செய்யாமல் உங்கள் மகனைக் காப்பாற்ற வேண்டும் என்று இடைநடுவில் வந்த வைத்தியரைப் புரிந்து கொள்ளாமல்

திட்டிவிட்டீர்களே என்றாள். இதனைக் கேட்ட அந்த தகப்பன்: ஓ! நான் தவறு செய்துவிட்டேன், நல்லவரை புரிந்து கொள்ளாமல் போய்விட்டேனே என கதறவும், சுகமடைந்த அவரது மகனை சத்திரசிகிச்சை அறையிலிருந்து வெளியே கொண்டு வரவும் அந்த இடம் கண்ணீரால் நனைக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

ஆம் பிரியமானவர்களே!, **மத். 27:46 "என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்"** என்று இயேசு சிலுவையில் தொங்கியபடி பிதாவானவரிடம் கூறினார். தம்முடைய ஒரே பேறான குமாரனை இப்பூமிக்கு அனுப்பி மனுக்குலத்தின் சகல பாவங்களையும் அவர் சுமந்து தீர்க்க வேண்டும் என்பதற்காக பிதாவானவர் குமாரன் இயேசுவை ஒரு கணம் கைவிட்டார். பாவிகளாகிய எம்மீது அவர் கொண்டிருந்த அன்புதான் காரணம். தம்முடைய குமாரனை சிலுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து, சகல மனிதர்களையும் மீட்கும் கிரயத்தைச் செலுத்தினார். **1யோவான் 4:9 "தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும் படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினாலே தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது"**. இந்த கதையில் பார்த்த தகப்பனைப் போல அந்த வைத்தியரை புரிந்து கொள்ளாமல் திட்டியதைப் போன்று நாமும் தேவனை புரிந்து கொள்ளாமல் எமது வாழ்வின் பாவங்களால் அவரை துக்கப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். ஆனாலும் அந்த தகப்பன் மனந்திரும்பியதைப் போல நாமும் நம்முடைய எல்லா பாவங்களையும் அறிக்கை செய்து அவரை தொடர்ந்து துக்கப்படுத்தாமல் எம்முடைய வாழ்க்கை மூலம் அவரை மகிமைப்படுத்துவோமா!






# வினா விடை – 64

## சரியான விடை எழுதியவர்கள்

01. நா.கிறிஸ்தீனா – காரைநகர்
02. நா.சிவபாக்கியம் – காரைநகர்
03. பா.கோமதி – காரைநகர்
04. லோ.வதனி – காரைநகர்
05. பா.தர்சினி – காரைநகர்
06. கே.சஜிதா – காரைநகர்
07. க.விக்னேஸ்வரன் – ஊர்காவற்றுறை
08. வி.நிதர்சன் – ஊர்காவற்றுறை
09. க.றெஜீவன் – ஊர்காவற்றுறை
10. வி.ஸர்மிளா – ஊர்காவற்றுறை
11. வி.நிதர்சனா – ஊர்காவற்றுறை
12. சி.எப்சிபா – மீசாலை
13. சி.அம்பாள் – மீசாலை
14. வா.கிறிஸ்ணா – மீசாலை
15. ஆர்.கனகாங்கி – மீசாலை
16. சி.அபிகாயில் – மீசாலை





# இளைஞரே! மூப்பருக்கு கீழ்ப்படியுங்கள்..

வாலிபர் மூலை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள் உரித்தாவதாக!

**நா**ளுக்கு நாள் உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் தேவன் பலத்த கிரியைகளைச் செய்து மக்கள் கூட்டங்களைச் சந்தித்து ராஜ்யத்தின் சுவிசேஷமானது விஸ்தாரமாகிக் கொண்டு சொல்வது நாம் அறிந்த உண்மையே. எனினும் எந்த அளவிற்கு ஆத்துமாக்கள் வசனத்தின் பால் திருப்பப்படுகின்றார்களோ அதே அளவைப் பார்க்கிலும் சத்துருவானவனின் நாச விதை தேவ பிள்ளைகள் மத்தியில் வஞ்சனையாய், தந்திரமாய் கிரியை நடப்பித்து பரிசுத்த வித்துக்களை அசிங்கமாக்கிக் செயலற்றுப் போகச் செய்கின்றது. இதற்கான ஓர் மாபெரும் காரணம்: தேவனை சரியாக தேவ பிள்ளைகள் புரிந்து கொள்ளாததே ஆகும். எப்போதுமே தேவன் உலகத்திலும் சரி, தன்னுடைய இரத்தத்தினால் சம்பாதிக்கப்பட்ட திருச்சபை யிலும் சரி அதிகாரங்களை ஏற்பாடு செய்து நியமித்துள்ளார். '**ஏனென்றால் அது தேவ ஒழுங்கும்: தேவ சித்தமுமாகும்**". இதை நன்கு புரிந்து கொள்வோம்.

பாவம் ஆரம்பித்ததே கீழ்ப்படியாமை யினால் தான். தேவ வசனத்தை வார்த்தை அடிப்படையிலே (காதால் கேட்டல்) கேட்டும், செயலின் அடிப்படையிலே (கிரியையிலே)

மறுதலித்ததினாலாகும். **'கீழ்ப்படிவு என்பது அடிமைத்தனமல்ல:அன்பின் ஆகக் கூடுதலான மனத்தாழ்மையான செயலாகும்".**

கீழ்ப்படியாமையினால் ஏற்பட்ட விளைவுகளை பார்ப்போமானால் கொடுமும், சேதமும், மரணமுமேயாகும். ஆயினும் வேதாகமத்திலே ஓரிரு சந்தர்ப்பங்களிலே தேவ கிருபை மேலோங்கி இருந்தபடியினாலே காரியம் நன்றாக அமைந்திருக்கின்றது. பிலேயாமுடன் பேசிய கழுதை, மீனின் வயிற்றிலே யோனா, பத்சேபாளுடன் சீரழிந்து போன தாவீது.

**ஆனால் ஒரு போதும் தன்னுடைய ஆதி மேன்மையை பெருமையினால்தேவனுக்கு விரோதமாய்மேட்டிமை கொண்ட தூதர் கூட்டத்தை தேவன் தப்பவிடவில்லை.** கீழ்ப்படியாமையினால் அவர்களை பரலோகத்திலிருந்து தள்ளிவிட்டார். மனுக்குலம் எவ்வளவோ விரோதித்தது, எப்படி பாவம் செய்தாலும் மறுபடியும், மறுபடியுமாக அழைக்கும் நல்ல ஆண்டவர் எதிர்ப்பார்ப்பது எல்லாம்: **"வாலிபரிடம் விசேஷமாக மூப்பருக்கு கீழ்ப்படியுங்கள்".**

## மூப்பர்

இப்பதவியானது திருச்சபையின் நலன் கருதி (கிறிஸ்துவின் சரீரமாகிய சபை) தேவனால் ஏற்படுத்தப்பட்ட உயரிய, பாரிய பொறுப்புக்களுடன் கூடிய ஓர் பெரும் உக்கிராணத்துவம் நிறைந்த பதவியாகும்.

## மூப்பரின் அதிகாரம்

அதிகாரம் என்பது தேவ ராஜ்யத்தின் வளர்ச்சிக்காகவும், தேவ மக்களின் பாதுகாப்பிற்காகவும் கூடவே சத்துருவானவனின் மாயா யாலத்திற்கு தப்புவித்து மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையில் பங்கம் விளைவிக்காமல் காத்து நடத்துவதற்கு வழிகாட்டியாக அமைந்த ஓர் உயரிய பணியாகும். கூடவே நிர்வாகப் பொறுப்புக்களையும் ஆவிக்குரிய சகல விடயங்களிலும் பூரணமாக வழி நடத்துபவராக இருப்பார்.

## மூப்பரின் தகுதி நிலை

திருவசனத்தின்படி வாழ்ந்து, அதையே வேத வசனத்தின்பால் சத்தியத்தை சத்தியமாக போதித்து, தேவனுடைய வீடாகிய சபையை சகல அதிகாரத்துடனும் நடத்துபவராக இருப்பார்.

**இப்பேர்ப்பட்ட மூப்பனுக்கு இளைஞரைக் கீழ்ப்படியும்படியாக உற்சாக மனதோடு ஒருவருக்கு ஒருவர் நாம் ஊக்குவிக்க வேண்டும்.**

**இன்றைய இளைஞர்களுக்கு கீழ்ப் படிவது என்பது பாரமான ஒன்றாகவும், சுயாதீனத்தை சிறையாக்கி கொள்வதாகவும் எண்ணுகின்றனர். இது மாபெரும் தப்பு/பிழையானதாகும்.**

எனக்கு பிரியமான வாலிப நண்பர்களே, ஆதாமுடைய கீழ்ப்படியாமையினாலேயே அனேகர் பாவத்திற்கு உள்ளானது போல இயேசு கிறிஸ்துவின் (இரண்டாம் ஆதாம்) கீழ்ப்படிதலினாலே அனேகர் நீதிக்கு உட்படுத்தப்பட்டனர். இயேசு தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய் காணப்பட்டு மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தம் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார். **பிலிப்பியர் 2:7-9 (7.) தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். 8. அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். 9. ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,** உங்களை நடத்துகிறவர்கள் **எபிரெயர் 13:17 உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்: அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே.**

**இன்றைய சபைகளின் மாபெரும் தேவை தேவனால் ஏற்படுத்தப்பட்ட தலைமைக்கு கீழ்ப்படிந்து அடங்கி சத்திய வசனத்தின் போதனையில் முன்னேறிச் செல்வதாகும்.** இளைஞரே திரும்பி வராத வாலிபத்தை கனமானதும், பெறுமதியானதுமாக கருதி கிறிஸ்தவ வாழ்க்கையிலே கறை, திரை, பிழை அற்றதாக காத்து நடக்க ஒரே வழி மூப்பருக்கு முழுமனதுடன் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளுங்கள். **தேவன் சபைகளைச் சந்தித்து எழுப்புதல் தீ பரவுவதற்கும் இச் செயலானது பேருதவியாயிருக்கும்.**

புரிந்து கொள்ளுங்கள், செயலாற்றுங்கள். தேவ கரத்திலும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட உண்மையான மூப்பரின் கரத்திலும் உங்களை தாழ்த்தி ஒப்படையுங்கள். தேவன் நிச்சயமாகவே உங்களை உயர்த்தி மகிழுவார்.

**போதகர்**
**வேதநாயகம் சுமணன்**

# தண்ணீர் திராட்சைரசமானது!




ஓர் கலியாண வீட்டிலே நடந்த உண்மை இது. மணவாளனுக்கு வெட்கமும், துக்கமும், அவமானமும் அணிமித்துக் கொண்டிருக்கு..... இறுதி மணித்துளியிலே இயேசுவிடம் அழைப்பு விடப்படுகிறது. கொண்டாட்டம் நடத்துபவர்களுக்கு வேறு வழி தெரியவில்லை! திராட்சை ரசம் குறைவுபடுவது மணவாளனுக்கு என்றுமில்லாதவாறு மீளமுடியாத கரி பூசப்பட்ட செயலாகும். அனேகருடைய இழிவான பேச்சுக்கு இடமான செயலாகும்.

இவை அனைத்தின் மத்தியிலும் இயேசு தன் வேளையை அவர்களுக்கு காண்பிக்கத்தவறவில்லை.

**பிரியமானவர்களே உங்கள் வாழ்க்கையில் தேவன் தன் வேளையை வைத்திருக்கின்றார். அது ஒரு போதும் முந்துவதும் இல்லை, பிந்துவதும் இல்லை.**

பல குறைவுகளோடு, போராட்டங்களோடு நீங்கள் இருக்கலாம். ஒன்று செய்யுங்கள். இயேசுவிடம் அதை தெரிவித்து அவர் விருப்பப்படி கீழ்ப்படிந்து செயற்படுங்கள். தண்ணீர் ரசமானது போல, எதிர்பார்க்க முடியாத காரியத்தை தேவனே நிலைநிறுத்திக் காட்டுவார்.



**கேளீர் இயேசுவிடம்....**
**உன் பாரங்களை!!!**

ரேமா

# உப்பில்லாப் பண்டம் குப்பையிலே!

## பெண்கள் பக்கம்

'உப்பில்லா பண்டம் குப்பையிலே" என்பது வழமையான ஒரு கருத்து. உப்புடன் அதிகமாக பழக்கப்பட்டிருப்பது பெண்களே. *உப்பு அதிகமாய் உணவில் சேர்த்து சங்கடப்பட்ட நாட்களும் உண்டு: உப்பு குறைவாக இருந்து உணவு உருசி குறைவு என்ற குறை கேட்ட நாட்களும் பெண்களாகிய எமக்கு அதிகம் உண்டு.*

பரிசுத்த வேதாகமமும் உப்பிற்கு மிக முக்கிய இடத்தைக் கொடுப்பதை **மத்தேயு 5:13** கூறுகின்றது: **நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்: உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக் கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற் குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்"** நமது ஆண்டவர் பூமியிலே எங்களை வைத்து நாம் தான் பூமிக்கு உப்பாயிருக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றார்.

> **“ ” பூமிக்கு உப்பாக சாரம் கொடுக்க வேண்டிய நாம் சாரத்தை இழந்தால் ஒன்றுக்கும் உதவாமல் போவதுமன்றி, மனிதனால் மிதிக்கப்பட வேண்டிய நிலைமைக்கும் தள்ளப்படலாம்.**

உப்பானது சாரமற்றுப் போனால எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. பூமிக்கு உப்பாக சாரம் கொடுக்க வேண்டிய நாம் சாரத்தை இழந்தால் ஒன்றுக்கும் உதவாமல் போவதுமன்றி, மனிதனால் மிதிக்கப்பட வேண்டிய நிலைமைக்கும்

தள்ளப்படலாம். என்பத னால் தான்: **மாற்கு 9:50 உப்பு நல்லது தான், உப்பு சாரமற்றுப்போனால், அதற்கு எதினாலே சாரமுண்டாக்குவீர்கள்? உங்களுக்குள்ளே உப்புடையவர்களா யிருங் கள், ஒருவரோடொருவர் சமாதானமுள் ளவர்களாயும் இருங்கள் என்றார். 'உங்களுக்குள்ளே உப்புடையவர்களாயிருங்கள்"** என்று இயேசு கூறினார்.

உப்புடையவர்களாயிருங்கள் என்றால்: நன்மைகள் எமக்குள் காணப்பட வேண்டும். உப்பின் தன்மைகளில் சிலவற்றைக் குறித்து ஆராய்ந்து பார்ப்போம்:

**உப்பு உருசியைச் கொடுக்கும், பழுதடையாமல் பாதுகாக்கும், சுத்திகரிப்புக்கு உதவும், ஆரோக்கியத்தைக் கொடுக்கும், கரடுமுரடானது ஆனால் கரையும் தன்மை கொண்டது.**

## 01. உப்பு உருசியைக் கொடுக்கும்:

எம்முடைய வாழ்க்கையும் மற்றவர்களுக்கு பிரயோசனமாய் இருக்க வேண்டும். **கொலோசெயர் 4:6[b] உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக.** வாழ்க்கையே கசப்பாய் இருப்பவர்களுக்கு நாம் பேசுகின்ற கிருபை பொருந்திய தேவ வசனங்கள் அவர்களுடைய வாழ்க்கையில் உணவுக்கு உப்பு எப்படி உருசியைக் கொடுக்கிறதோ அப்படியே அவர்களுடைய வாழ்க்கையும் அவர்களுக்கு உருசியாக மாறிவிடும்.

## 02. பழுதடையாமல் பாதுகாக்கும் தன்மை கொண்டது

சில உணவு பண்டங்களை நீண்ட நாட்களுக்கு நாம் வைத்து பாவிப்பதற்காக அவைகளுடன் உப்பை சேர்த்து பாதுகாக்கின்றோம். எம்முடைய வாழ்க்கையிலும் பாவம் பிரவேசித்து வாழ்க்கையைக் கெடுத்துப் போடாத வண்ணம் பரிசுத்தத்தை நாம் பேண வேண்டும். உணவு பழுதடையாமல் உப்பு பாதுகாக்கிறது. உப்பின் சாரம் நீங்கினால் அது மிதிக்கப்படுவதற்கே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது என்று வேதம் கூறுவது போன்று எம்முடைய வாழ்க்கைக்குள் பாவம் பிரவேசித்தால் நம்முடைய வாழ்க்கையும் கெட்டு மற்றவர்களுடைய வாழ்க்கையையும் எம்மால் பாதுகாக்க முடியாமல் போய்விடும்.

## 03. சுத்திகரிப்பின் தன்மை உடையது

சரீரத்தில் புண்கள் ஏற்பட்டால் உப்பு கலந்த நீரினால் கழுவுவார்கள். இது ஒரு கிருமி கொல்லியாக இருப்பதால் புண்களில் இருக்கும் கிருமிகளை அழித்துவிடும். **"எசேக்கியேல் 16:4 உப்பால் சுத்திகரிக்கப்படவுமில்லை"** ஆகவே எம்முடைய வாழ்க்கை உப்பினால் சாரம் ஏற்றப்பட்டிருந்தால் மற்றவர்களும் எம்முடைய பரிசுத்த வாழ்க்கையை பார்த்து மனந்திரும்புவார்கள்.

## 04. ஆரோக்கியத்தை கொடுக்கும்

**11இராஜாக்கள் 2:21-22 (21.) அவன் நீரூற்றண்டைக்குப் போய், உப்பை அதிலே போட்டு: இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்: இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். 22. எலிசா சொன்ன வார்த்தையின்படியே அந்தத் தண்ணீர் இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி ஆரோக்கியமாயிற்று.** உப்பை அதிலே போட்டு இந்த தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன். எலிசா சொன்ன வார்த்தையின் படியே அந்த தண்ணீர் இந் நாள் வரைக்கும் இருக்கிற படி ஆரோக்கியமாயிற்று. சரீரத்தில் நோவு, வீக்கம் இருக்கும் போது உப்பு கலந்த நீர் பாவிக்கும் போது நோவு, வீக்கம் சுகமாகின்றது.

அது போல எம்முடைய வாழ்க்கையிலும் வேதனையான நேரங்கள் அல்லது வேதனையோடு இருப்பவர்களை நாம் சந்திக்கும் போது உப்பாகிய நாம் ஆண்டவரின் வாக்குத்தத்தங்களினால் நிறைந்திருந்து அந்த வாக்குத்தத்தங்களை கூறி உற்சாகப்படுத்தி, அவர்களின் நோவு, வேதனைகளை அகற்றுவதற்கு வழி உண்டுபண்ணலாம்.

## 05. கரடுமுரடானது ஆனால் கரையும் தன்மை உடையது

உப்புக் கட்டியை தடவிபார்த்தால் கரடு முரடானது, காயங் களுடன் காணப்படும் ஆனால் தண்ணீருக்குள் அதனை இட்டு கரைத்தால் அது கரையும் தன்மையுடையதாக காணப்படும். உப்பு போன்று எம்முடைய வாழ்க்கையிலும் எமக்கு நிறைய காயங்கள் ஏற்பட்டிருக்கலாம். உப்பை கரைக்கும் போது அது எப்படி தன்னை விட்டுக் கொடுத்து கரையக்கூடியது போல எமக்குள் காயங்கள்

" "

**எம்மை நாம் விட்டுக் கொடுக்கும் போது எம்முடைய வாழ்க்கை உப்பைப் போன்று சுவையாக, பழுதடையாமல், சுத்திகரித்து, ஆரோக்கியமாக, கரடுமுரடான நேரங்களில் மற்றவர்களுக்காக பிரயோசனமான வாழ்க்கையாக இருக்கும்.**

இருந்தாலும் மற்றவர்களுக்கு சேதம் விளைவிக்காமல் விட்டுக் கொடுத்து மற்றவர்களை ஆறுதல்படுத்த வேண்டும்.

எம்மை நாம் விட்டுக் கொடுக்கும் போது எம்முடைய வாழ்க்கை உப்பைப் போன்று சுவையாக, பழுதடையாமல், சுத்திகரித்து, ஆரோக்கியமாக, கரடுமுரடான நேரங்களில் மற்றவர்களுக்காக பிரயோசனமான வாழ்க்கையாக இருக்கும்.

இதை வாசிக்கும் சகோதரியே! சற்று உன்னுடைய வாழ்க்கையை சிந்தித்துப்பார். உப்பின் தன்மைகள் உன்னுடைய வாழ்க்கையில் இருக்கின்றதா? ஒவ்வொரு நாளும் சமையல் அறையில் உப்பு உன்னுடன் தான் பேசிக்கொண்டி ருக்கிறது. **லூக்கா 14:34-35 (34.) உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்? 35. அது நிலத்துக்காகிலும் எருவுக்காகிலும் உதவாது, அதை வெளியே கொட்டிப் போடுவார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்.**

இந்நிலை எங்களுக்கு வரக்கூடாது என்பதற்காக தேவன் நம்மை எச்சரிக்கின்றார். தேவன் எம்மை பூமிக்கு உப்பாக இருக்கும்படி தெரிவு செய்திருக்கின்றார். உப்பின் தன்மை உடையவர்களாய் இருப்போம். அப்போது தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு பிரயோசனமுடையவர்களாய் இருப்போம்.

திருமதி. J.பிலி

**நாம் வாழ்வது நமக்காக அல்ல. நாம் வாழ்வது நம்மை வாழ வைத்த தேவனுக்காகவே**



# உருவம் கொடுத்தவரை ஏன் உதறித்தள்ளுகிறாய்?





*ஒரு முறை ஒரு சிற்பி தன்னுடைய திறமையினால் மிகவும் அழகான ஒரு யானையை உருவாக்கினார். அது மிகவும் அழகாக இருந்ததினால் அவருக்கு மிகுந்த சந்தோஷம். எனவே அதனை தன்னுடைய காட்சி அறையில் வைக்கும்படியாக அதனைக் கொண்டு சென்று வைக்க முற்பட்ட போது தவறுதலாக கையிலிருந்து கீழே விழுந்து உடைந்துவிட்டது. இதனைக் கண்ட போது மிகவும் வேதனை அடைந்தார். ஓரிரு நாட்கள் உணவு கூட அருந்தாமல் இருந்தார். மிக வேதனை.*

அன்பு சகோதரா/சகோதரி, வேதாகமத்தில் ஒரு வார்த்தையுண்டு. **சங்கீதம் 139:15-16 (15.) நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. 16. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது: என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது.**

எம்முடைய உருவாக்கம், எம்முடைய உருவம் தேவனால் எமக்கு கொடுக்கப்பட்டது. எம்முடைய பெற்றோர், எம்மைக் காண முன்பு, அன்பு சகோதரா! சகோதரி உன்னை தேவன் கருவில் கண்டு, உன்னைப் பெயர் சொல்லி அழைத்தார். உனக்கு சுவாசம், ஜீவன், பெலன் கொடுத்து ஆசீர்வதித்திருக்கிறார். அவருடைய பாதுகாப்பிற்குள், **அவருடைய கரத்திற்குள் இருக்கும் வரைக்கும் எமக்கு பாதுகாப்பு, சுகம், சமாதானம், பெலன்.**

ஆனால் நாமோ அவருடைய கரத்தில் இருப்பதைப் பார்க்கிலும் எம்முடைய சுயகிரியைகளினால் பட்டம், பதவி,

அந்தஸ்து எனும் செருக்கினால் தேவனை விட்டுவிட்டு எம் சொந்த வழியில் நடந்து தேவனை வேதனைப்படுத்துகின்றோம். அவர் வேதனை அடைகின்றார். **சங்கீதம் 139:24 வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.** வேதனையுண்டாக்கும் வழி உண்டு. அந்த சிறப்பி இரண்டு மூன்று நாட்களாக உணவை ஏற்கவில்லை. ஆனால எமக்கு உருவம் கொடுத்த இயேசுகிறிஸ்துவோ தம்முடைய விலை மதிக்க முடியாத இரத்தத்தையும், ஜீவனையும் கொடுத்தார். சிதைந்த உன் வாழ்வை மறுபடியும் கட்டியெழுப்ப அவர் ஆயத்தம் உள்ளவராக இருக்கின்றார்.



எனவே இன்று உன் வாழ்க்கை குடும்ப பிரச்சினையினால் சிதைந்திருக்கலாம். எதிர்காலம் சிதைந்திருக்கலாம். உயர் படிப்பில் முன்னேற்றம் இல்லை என சிந்திக்கலாம். வேலை தேடியும் கிடைக்கவில்லையே... இப்படி பல இன்னல்கள் நடுவில் வாழும் அன்பு மகனே, மகளே உனக்கே!. எங்கே பதில் கிடைக்கும் என்று இருக்கின்றாயோ உனக்கு ஒரு நல்ல செய்தி.

**இயேசுவே பதில்!**

**உருவம் கொடுத்தவரை**

**உதறித்தள்ளாதே!!**

**தேவன் தாமே உங்களை**

**ஆசீர்வதிப்பாராக.**

உங்கள் அன்பின்
**J.கிறேசியன்.**

**அவருடைய கரத்திற்குள் இருக்கும் வரைக்கும் எமக்கு பாதுகாப்பு, சுகம், சமாதானம், பெலன்.**




## சபையின் அருட்சாதனங்கள்/சடங்குகள்

**புதிய ஏற்பாட்டில் எமக்கு கொடுக்கப்பட்டுள்ள தெளிவான உபதேசங்களுக்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.** எமக்கு வேதாகமத்தின் சத்தியங்களை அறிய வேண்டும் என்ற ஆவலும், **அத்தோடு சம்பந்தப்பட்ட சரியான அனுபவமும் தேவை.** வேதாகமம் இரண்டு பிரதான அவசிய சத்தியங்களாகிய ஞானஸ்நானம், திருவிருந்து என்பவற்றைக் குறித்து என்ன போதிக்கின்றது.

**இதை சபையின் அருட்சாதனங்கள் எனச் சொல்வர்.** அருட் சாதனம் எனக்கூறும் போது நாம் கைக்கொள்ளவும், கீழ்ப்படிய வும் நம் கர்த்தரால் கட்டளையிடப்பட்ட அல்லது நியமிக்கப் பட்ட ஒன்று என அறியலாம். **தேவன் முழுக்கு ஞானஸ்நானத்தையும், திருவிருந்தையும் சபையானது கைக்கொள்ளவும், கீழ்ப்படியவும் கொடுத்துள்ளார்.**

### 01. தண்ணீரில் ஞானஸ்நானம்

வேதத்தில் இந்த தெய்வீக சடங்கை நிறைவேற்ற பணிக்கப்பட்டவன் யோவான் ஸ்நானகன் எனக் காணலாம். லூக்கா 3:2-6. இயேசு கிறிஸ்துவும் இதற்கு அங்கீகாரம் வழங்கி தானும் ஞானஸ்நானம் பெற வந்தார் - மத்தேயு 3:13. **இயேசு யோவான் கொடுத்த ஞானஸ்நானம் தேவனால் உண்டானது என அறிவித்தார். மத்தேயு 21:25.** சீஷர்களுக்கும், சபைக்கும் இயேசு ஞானஸ்நானம் கொடுக்கும்படி பணித்தார்.

**அவர்களைவிட்டு போகும் முன் இயேசு கூறியது: மத்தேயு 28:19 ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ் நானங்கொடுத்து.** ஆரம்பத்தில் இருந்தே சீஷர்கள் இந்தக்

கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்கள். இதற்கு அப்போஸ்தலர் நடபடிகள் ஆதாரம். **ஞானஸ்நானத்தின் தோற்றம் பரலோகம்.**

சபையானது கைக்கொள்ள தேவனால் கொடுக்கப்பட்ட சாதனமே இது. **ஞானஸ்நானம் கொடுக்க வேண்டிய முறை: தண்ணீரில் அமிழ்த்தியே ஆகும்.** ஆதி சபை அதிகமாக நதிகளிலும், குளங் களிலும் ஞானஸ்நானம் கொடுத்தார்கள் எனக் கூறப்படுகின்றது. **ஆனால் கிறிஸ்தவர்கள் ஆலயங்களைக் கட்ட ஆரம்பித்த போது நீரில் அமிழ்த்தி ஞானஸ்நானம் கொடுக்கக்கூடிய தொட்டிகளையும் கட்டினார்கள்.** இதை அகழ்வு ஆராய்ச்சிகளில் இருந்து அறியக்கூடியதாய் உள்ளது - **ரோமர் 6:4.**

தண்ணீரில் அமிழ்த்தி ஞானஸ்நாம் கொடுப்பது ரோமர் 6:4இல் கூறப்பட்ட பெரிய உண்மைக்கு அடையாளம். அத்துடன் தேவனுடைய இரட்சிக்கும் கிருபையினால் உண்டான உள்ளான மாற்றத்திற்கும் அடையாளம். **யாருக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்.** மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசுவின் மேல் விசுவாசம் வைத்து மறுபடியும் பிறந்தவர்களுக்கு கொடுக்க வேண்டும். **கைக்குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கதாக வேதத்தில் ஆதாரம் இல்லை.** வேதம் ஒரு ஞானஸ்நானத்தையே அறிந்திருக்கிறது. எபேசியர் 4:5.

## 02. கர்த்தருடைய பந்தி

இதை திருவிருந்து எனவும் வேறு வழியாகவும் கூறுவர். **இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகின்றார்: 1கொரிந்தியர் 11:23-26.** ஆரம்பத்தில் இருந்தே ஆதி சபை இதைக் கைக்கொண்டு வந்தது - அப்போஸ்தலர் 2:42.

**வாரத்தின் முதல் நாளில் அதாவது ஞாயிற்றுக்கிழமைகளில் இதைக் கைக்கொண்டார்கள் எனவும் அறியக்கூடியதாக உள்ளது. ஞாயிறு இயேசு உயிர்த்தெழுந்த தினம்.** பரிசுத்த ஆவியானவர் முதலாவதாக சீஷர்கள் மேல் ஊற்றப்பட்டது அதாவது பெந்தெகொஸ்தே நாள்.

# இந்த அருட்சாதனங்களைக் குறித்த சரியான மனப்பாங்கு

## 01. இதை விசுவாசிக்க வேண்டும்.

**வசனத்தைக் குறிக்ககான அருமையான காரியத்தை பற்றிப் பவுல் சொல்கின்றார் - ரோமர் 10:8.** தேவனுடைய வார்த்தை

வெறுமையானது அல்ல. எமக்குத் தேவையான சகல ஆசீர்வாதங்களினாலும் நிறைந்தது. **விசுவாசத்தோடு இதைக் கைக்கொள்கையில் தேவன் ஏதாவது ஒன்றைத் தருவார் அல்லது ஏதாவது ஒன்றைச் செய்வார்.**

இந்த அருட்சாதனங்களை சாதாரண அடையாளச் சின்னங்களாக மாத்திரம் விசுவாசிக்கக்கூடாது. **இவை தேவனுடைய சத்திய வார்த்தையாகும்.** எனவே இதை விசுவாசத்தோடு ஏற்றுக் கொண்டு, விசுவாசத்தோடு கைக்கொண்டால் அது நமக்குள் ஆசீர்வாதத்தை நாட்டும்.

## 02. இதற்கு கீழ்ப்படிய வேண்டும்

ரோமர் 1:7இல் விசுவாசக் கீழ்ப்படிவைக் குறித்து வேதம் பேசுகின்றது. **உண்மை விசுவாசம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும். நாம் புரிந்து கொள்ளாமல் இருக்கும் போதும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும்.**

தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிவதன் விளைவாக நாம் தேவ ஆசீர்வாதங்களை அனுபவிக்கலாம். **கொர்நெலியுவைப் பற்றிய சம்பவத்தில் ஞானஸ்நானம் எவ்வளவு முக்கியம் என்பதனைக் காணலாம்.** இவர்கள் எல்லோரும் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

**அவ்வளவும் போதும் என பேதுரு கூறவில்லை.** பேதுரு உபதேசிக்கவும், ஞானஸ்நானம் கொடுக்கவும் கட்டளை பெற்றவன். **இதனால் பேதுரு கீழ்ப்படிய மனமுள்ளவனாக, ஞானஸ்நானம் எடுக்கும்படி கூறுகிறான் – அப்போஸ்தலர் 10:48.**

## 03. அருட்சாதனத்தின் மூலம் தேவன் நம்முடன் பேசுவார்

இவைகள் படத்தின் வடிவிலே காணப்படும் தேவ வார்த்தை. **முழுக்கு ஞானஸ்நானம் என்ன சொல்கின்றது:** இது இயேசுவின் அடக்கத்தையும் உயிர்த்தெழுதலையும் நினைவுபடுத்துகிறது. **அத்துடன் இது விசுவாசி பாவத்திற்கு மரிக்கதையும், புதிதான ஜீவனுள்ளவர்களாய் வாழுவதற்கு உயிர்ப்பிக்கப்படுவதையும் பேசுகிறது.** இதனால் தான் ஞானஸ்நான ஆராதனை பகிரங்கமாக நடத்தப்படுவது விரும்பப்படத்தக்கதாக இருக்கிறது.

**ஞானஸ்நானத்தின் போது ஒரு விசுவாசி பகிரங்கமாக தன் விசுவாசத்தை அறிக்கை செய்கிறார்.** இந்தக் கீழ்ப்படிவும், விசுவாசமும் நிறைந்த செயலின் மூலம் கூடியிருப்போருடன் தேவன் பேசுவார். **ஞானஸ்நான ஆராதனையின் போது மக்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள்.**

விசுவாசிகள் கர்த்தருக்குள் பக்தி விருத்தி அடைந்து ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறார்கள். **கர்த்தருடைய பந்தியும் எமக்குண்டான தேவ வார்த்தையே.**

இது முதலாவதாக கர்த்தருடைய ஜெயத்தைக் குறித்து பேசுகிறது. **அந்தப்படி அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலே பாத்திரத்தை எடுத்து...** இதுவே சரித்திரத்தில் இருண்ட இரவு. **ஆனால் அதுவே எமக்கு பிரகாசமுள்ள பகலாக மாறியது ஏன்? இயேசு முற்றுமான ஜெயத்தை எடுத்தார்.** அவரது ஜெயம் எங்களது ஜெயமாக இருக்கிறது. **நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளும் போது,** சிலுவையை பின்நோக்கிப் பார்த்து, இயேசுவின் மூலம் தேவன் நமக்குச் செய்ததை நினைவு கூருகின்றோம். **1கொரிந்தியர் 11:26 கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கின்றீர்கள்.**

இது கர்த்தருடைய மகத்தான வேலையை அறிவிக்கிறதாக இருக்கிறது. அதாவது பாவ நிவாரணம் அல்லது பாவப் பரிகாரம். **இது ஒரு நன்றி கூறும் ஆராதனையைப் போல் ஆகும்.** தேவன் எமக்குச் செய்தவற்றிற்காக அவரைத் துதித்து ஆராதிக்கின்றோம். **நாம் கல்வாரியை மாத்திரம் நோக்கிப் பார்ப்பதில்லை.** கர்த்தரின் பந்தி தற்கால நம் தற்கால தேவைக்கும் அவசியமானது.

**இது பெலப்படுத்தும் போஜனம்.** கிறிஸ்து நமக்கு எப்படியானாரோ அதை நாம் பெற்றுக் கொள்ளுகிறோம் - 1கொரிந்தியர் *1:30*. **கர்த்தருடைய பந்தி நாம் உலகத்தில் இருந்து பிரித்தெடுகக்கப்பட்ட பரிசுத்த சபை என்பதனையும் நினைவுபடுத்துகிறது.** 1கொரிந்தியர் *11:28* 'எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்து அறிந்து" எனக் கூறுகிறது. **இது எம் ஆவிக்குரிய வாழ்விற்கு அவசியமானதும் ஆரோக்கியத்திற்கேற்றதாகவும் இருக்கிறது.**

1கொரிந்தியர் *5:11* மனந்திரும்பாதவனோடு அல்லது பாவத்தில் ஜீவிப்பவர்களோடு நாம் புசிக்கக்கூடாதென வேதம் எச்சரிக்கிறது. **கிறிஸ்துவின் சீஷர்களுக்கே கர்த்தருடைய பந்தி.** கர்த்தருடைய பந்தி சபையின் ஜீவனுள்ள நம்பிக்கையைக் குறித்தும் காட்டுகிறது. **அது கல்வாரியில் கிறிஸ்துவின் செயலைச் சுட்டிக்காட்டுகிறது.** இது நம்முடைய தற்கால நிலையை வளர்ப்பதாகவும் ஊக்குவிப்பதாகவும் இருக்கிறது. **அத்துடன் இந்த அருட்சாதனம் தொடர்ச்சியாக கர்த்தருடைய 2ஆம் வருகையை நினைவுபடுத்துவதாகவும் உள்ளது.**

இது இயேசு வரும்வரை அவர் மரணத்தை தெரிவிப்பதாக இருக்கிறது. **லூக்கா 22:16இன் படி இயேசுவின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் முடிவான வெற்றியையும் நித்திய இராஜ்ஜியத்தையும் குறிக்கிறது. இயேசு தான் அடையப்போகும் வெற்றியைக் குறித்து நிச்சயம் உள்ளவராக இருந்தார்.** அவர் சிலுவையில் எல்லாப் பாடுகளையும் எதிர்நோக்கினாலும் சமாதானம், நம்பிக்கை, வெற்றி என்பவற்றைப்பற்றியே பேசினார்.

**இயேசுவின் வெற்றியையும் அவரது வருகையையும் நினைவு கூரும்படி இந்த சாதனத்தைக் கொடுத்தார்.** கிறிஸ்துவின் சபையானது வெற்றி சூடிய சபையாகும். **ஏனெனில் எம் இரட்சகர் சிலுவையில் மரித்த போது எல்லா சத்துருக்களையும் வெற்றி கொண்டார்.** தேவனுடைய சபையானது தேவனின் வசனத்தைக் கவனிக்க வேண்டும். **வசனம் எனும் போது ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி என்பவற்றைப் பற்றியும் வசனம் என்ன சொல்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.** வார்த்தையில் கடைப்பிடிக்கும்படி கூறியதை நிராகரிப்பது பெரும் பாவமாகும்.

***(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)***

**தொடரும்...**

## குறுக்கெழுத்துப் போட்டி – 62 சரியான பதில் எழுதியவர்கள்

*01. சி.அபிகாயில் – மீசாலை*
*02. ஆர்.கனகாங்கி – மீசாலை*
*03. லா.கிறிஸ்ணா – மீசாலை*
*04. சி.அம்பாள் – மீசாலை*
*05. சி.எப்சிபா – மீசாலை*
*06. வி.ஸர்மிளா – ஊர்காவற்றுறை*
*07. கே.சஜிதா – காரைநகர்*
*08. பா.தர்சினி – காரைநகர்*
*09. லோ.வதனி – காரைநகர்*
*10. பா.கோமதி – காரைநகர்*
*11. நா.சிவபாக்கியம் – காரைநகர்*
*12. நா.கிறிஸ்தீனா – காரைநகர்*

# குறுக்கெழுத்துப்போட்டி - 63

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | ■ | ■ | 02 |
| ■ | | ■ | | 04 | | 03 | | |
| ■ | | | ■ | | ■ | | | |
| | 05 | | ■ | | ■ | | | |
| | ■ | | ■ | ■ | ■ | | | ■ |
| | 07 | 06 | | | | ■ | | |
| | | ■ | ■ | ■ | | | 08 | |
| | | 09 | | | | | ■ | |
| 10 | ■ | | | | | | | 11 |

குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களை தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம். - நன்றி -

## இடமிருந்து வலமாக

01. இவன் 1000 பிரபுக்களுக்கு முன்பாக திராட்சரசம் குடித்தான்
07. இவனைப் போலொத்த ராஜா இவனுக்கு முன் இருந்ததுமில்லை: இவனுக்கு பின் எழும்பினதுமில்லை
09. இவனுக்கு கீலேயாத் தேசத்தில் 23 ஊர்கள் இருந்தன

## வலமிருந்து இடமாக

03. இவன் எருசலேமில் 40 வருடம் அரசாண்டான்
08. இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாய் இருந்தவரே என்று புலம்பியவன்
11. இந்தப் புத்திரர் தங்கள் வம்ச அட்டவணையைத் தேடி அதைக் காணாமற்போனார்கள்

## மேலிருந்து கீழாக

02. என் தேவனுடைய கரம் என் மேல் நன்மையாக இருக்கிறது எனக் கூறியவன்
03. பலியிடும் நாளில் இவர் வருமட்டும் ஜனங்கள் போஜனம் பண்ணமாட்டார்கள்
04. ஆரோன் இங்கே அடக்கம் பண்ணப்பட்டான்
07. இவன் சமாதான காலத்திலே யுத்த காலத்து இரத்தத்தை சிந்தினான்

## கீழிருந்து மேலாக

05. மெராரியின் வம்சங்களுக்கு தலைவன்
06. இவன் புத்திரருடைய சுதந்தரம் யூதா புத்திரரின் பங்கு வீதத்திற்குள் இருக்கிறது
08. செமராயீம் மலை இந்த மலைத்தேசத்தில் இருந்தது
10. ஆமானின் தந்தை
11. தாவீது மக்னாயீமில் தங்கியிருந்த போது அவனைப் பராமரித்த மிகப்பெரிய மனுசன்



# காவலாளி இல்லாத வீடு

## வேதப்பகுதி: ரோமர் 1:28–32

ஒரு நல்ல வீடு. ஆனால் அந்த வீடு திறந்து கிடக்கிறது. யாரும் அங்கே இல்லை. இப்பொழுது என்ன நடக்கும்? அந்த வீட்டில் நாய், பூனை, எலி போன்றவை வந்து தங்கும். சிலந்திகள் கூடு கட்டும், பாம்பு, பல்லிகள் கூட வந்துவிடும். இந்த வீட்டில் தங்க யாரும் விரும்பமாட்டார்கள். ஏன் இந்த நிலமை? அந்த வீட்டில் காவலுக்கு யாரும் இல்லை.



அது போலவே மனிதனுடைய இருதயமும். அங்கே இயேசு இல்லாவிட்டால் அது ஒரு ஆளில்லாத திறந்த வீடு. அங்கே கெட்ட சுபாவங்கள், தவறான ஆசைகள், மோசமான நினைவுகள் யாவும் வந்து விடும். அங்கே அமைதியோ, சந்தோஷமோ இராது. அங்கே சாத்தான் ஆளுகை செய்வான். இயேசுவாகிய காவலாளி அங்கே வரவேண்டும். அப்போது ஆகாதவைகள் யாவும் வெளியே போய்விடும். நல்லவைகள் உள்ளே வரும். அந்த வீட்டை எல்லாரும் விரும்புவார்கள்.

**சிந்தனைக்கு:- இருதயத்தை நீ ஒழுங்காக வைக்காவிட்டால் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தக்க வைக்க முடியாது.**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! – ஜூன் 11

# அருட்பணியாளர் சரிதை



## சா.பரமானந்தம்ஐயர்

### 1873 – 1960

## காலத்தைப் பயன்படுத்துவோம்

*காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில் கண்ணீர் விடுவாயே. ஞாலத்தில் பிறவியை நாட்டின நோக்கத்தை சீலமாய் நினைத்தவர் மூலம் பிழைத்திடுவாய்.* இப் பாடல் வரிகளை நீங்கள் பாடியிருக்கக்கூடும். உண்மையாகவே இப் பாடல் வரிகளும் உங்கள் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்திருக்கக்கூடும். அவ்வளவு வல்லமையாய் இப் பாடலை எழுதினார் ஒரு போதகர்.

போதகர்கள் பலர் திருச்சபைகளில் பணியாற்றி மறைந்துள்ளார்கள். **அவர்களில் மக்கள் மனதில் நீங்காமல் இடம்பெற்றவர்கள் ஒரு சிலரே. அவர்களில் வாழ்க்கையாலும், வார்த்தையாலும் சான்றாக விளங்கி இசைப் பாடல்களால் நீங்கா இடம் பெற்ற சிறந்த ஜெப வீரர் பரமானந்தம் ஐயர் ஆவார்.** இவர், தாமஸ் உவாக்கர் மிஷனெரியோடு இணைந்து பணியாற்றியவர். மேலும் சாது சுந்தர் சிங் அவர்களோடு ஐந்தாம் ஆவிக்குரிய கூட்டத்தில் பேசினார்.

1906ஆம் ஆண்டு சென்னையில் இறைபணியாற்றினார். தமது 36ஆவது வயதில் குருவாக அபிஷேகம் பண்ணப்பட்ட இவர், பல இடங்களுக்கும் சுற்றுப்பயணம் செய்து, இறைவனின் அருட்பணியை வல்லமையாக செயற்படுத்தினார். இவர் ஒரு ஒப்பற்ற கிறிஸ்தவ வீரர். ஆன்ம எழுப்புதல் பிரசங்கி, இறையியல் கொள்கைகளை வலியுறுத்தி விசுவாசக் கோட்பாடுகளை நிலைநிறுத்த வேண்டுமென்று தீவிரமாக உழைத்தவர், அதற்காக ஜெபித்தவர். உரைநடை பொழிவதில் ஒரு அருவி, இவர் ஓயாது பாடும் குருவி, திருமறையை விளக்கும் கருவி.

**இவர் 13 நூல்களை எழுதியுள்ளார். இவை யாவும் இறை உணர்வை வளர்ப்பதாகவும், மறையுணர்வைப் பெருக்குவதாகவும், நல்லொழுக்க நெறியில் வளர்ப்பதாகவும் அமைகின்றது. இவர் எழுதி 11 கீர்த்தனைகள், ஆண்டவரின் அருளைப் பெற வேண்டி ஜெபிக்கும் ஜெபங்களாக அமைந்துள்ளது. 'எந்நாளுமே துதிப்பாய்", 'என் ஆத்துமாவே நீ எந்நாளுமே துதிப்பாய்" என்ற பாடலும் இவர் எழுதியதே.** தமது போதனைகளாலும், சாதனைகளாலும் தமிழ் நாட்டு மக்களின் அறிவுக் கண்களையும், ஆன்மீகக் கண்களையும் அகலத்திறந்தவர் இவர். இதே நாள் 1960இல் இறைவன் புகழ்பாடச் சென்றார்.

**அன்பரே! இவ்வுலக மக்களுக்கு நீங்கள் அருளும் அருட்கொடை என்ன?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: இரட்சிப்பு வேண்டும், மோட்சம் வேண்டும் என்று கேளாமல், கிறிஸ்துவைத் தேடி அவர் வழியில் நடப்பதே முக்கியம் — பரமானந்த ஐயர்.**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" மே 17*

---

# தேவசகாயம்பிள்ளை

## 1712 – 1752

## இறைவனின் அடியார் இறந்தும் பேசுவர்

காற்றாடி மலை... தமிழ் நாட்டின் ஆரல்வாய்மொழி என்ற இடத்தில் அமைந்துள்ளது. நாள்தோறும் அவ்விடத்தை தரிசனம் செய்வோர் எண்ணற்றோர்.

அவ்விடத்தில் அப்படி என்னதான் சிறப்பு? கண்டவர் வியக்கும் காட்சிகள், அண்டியவர் அதிசயிக்கும் செய்திகள. **ஆம்! இந்தியாவில் புனிதர் தோமாவிற்குப் பின் இரத்த சாட்சியான வேதசாட்சி தேவசகாயம் பிள்ளை. தன் உடலைக் கிறிஸ்துவிற்குக் காணிக்கையாகக் கொடுத்த இடம்.** தேவசகாயம்பிள்ளை வைதீக இந்து குடும்பத்தில் பிறந்தார். சாஸ்திரங்களில் முறைப்படி தனது 28ஆம் வயதில் அரசு அதிகாரியாக மன்னரால் நியமிக்கப்பட்டார். மன்னரின் தலைமைத் தளபதியான டினலாய் மூலம் கிறிஸ்துவின் அன்பைப் பற்றி அறிந்து கொண்டார். அன்று முதல் கிறிஸ்துவின் தொண்டரானார்.

நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் மதம் மாறிய குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டார். கிறிஸ்துவை மறுதலிக்கும்படி பலமுறை எச்சரிக்கப்பட்டார். ஆனால் தேவசகாயம்பிள்ளையோ கிறிஸ்துவின் அன்பை விட்டு விலகுவதில்லை என மன உறுதியுடன் காணப்பட்டார்.

**மூன்று ஆண்டுகள் கடும் சித்திரவதைக்குள் தள்ளப்பட்டார். சிறைவாசத்திற்குள் அடைக்கப்பட்டார். எருமை மாட்டின் மீது ஏற்றி ஊர் வலமாகக் கொண்டு போகப்பட்டார். கசைமுள் கொண்டு அடிக்கப்பட்டார். சொல்ல முடியாத துயரத்திற்கு ஆளானார்.**

எத்தனையோ கொடுமைகள், ஆனால் தேவசகாயம்பிள்ளையின் விசுவாசத்தை, அவைகளால் அசைக்க முடியவில்லை. இறுதியில் 1752ஆம் ஆண்டு ஜனவரி 14இல் போர் வீரர்களின் குண்டுகளுக்குப் பலியாகி, பலரின் விசுவாசத்தை உயிர்பெறச் செய்தார். இன்றும் காற்றாடி மலை அவர் புகழை அனைவருக்கும் பறைசாற்றுகின்றது.

**அன்பரே! இவ்வுலக வாழ்வுக்குப் பின்பும் இயேசுவுக்கு சாட்சி பகர உம்மால் முடியுமா?**

**'வாழ்விலிருந்து வாழ்வுக்கு: இயேசுவின் மேல் கொண்ட உன்னதமான நம்பிக்கையின் வீரனாக அவருக்காக மடிய நான் தயார். — தேவசகாயம்பிள்ளை**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 14*

---

# குறுக்கெழுத்துப் போட்டி – 62
# சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. தரித்திரனுடைய (யாத் 23:3)
04. பாஷாவை (1இரா 16:2)
06. கூசான்ரிஷதாயீம் (நியா 3:8)
08. ஆரியோகு (தானி 2:14)

**மேலிருந்து கீழாக**

02. அப்பம் (லேவி 26:26)
03. பேரேஸ் (ரூத் 4:12)
07. சாலொமோன் (11சாமு 12:25)
08. ஆமான் (எஸ்த 6:12)
10. மிகாயா (11நாளா 18:13)

**வலமிருந்து இடமாக**

02. அஸ்தோத்ஊராரை (1சாமு 5:6)
05. படைத்தளம் (1நாளா 11:16)
12. எலெயாசார் (எண் 16:40)

**கீழிருந்து மேலாக**

09. ரெகூம் (எஸ்றா 4:8)
11. சீரியோன் (உபா 3:9)
12. எலியா (11இரா 1:16)

# வினா விடை - 65

**01.** கள்ளருடைய கூடாரங்களில் செல்வமுண்டு என்றது யார்?

**02.** தான் பிறந்த நாளை சபித்த இரண்டு பரிசுத்தவான்கள் யார்?

**03.** காட்டிலே சிங்கம் எப்போது கெர்ச்சிக்கும்?

**04.** நான் மலைப்பாம்புகளுக்குச் சகோதரன் என்றது யார்?

**05.** தவறான பொருத்தனை செய்தது யார்?

**06.** தன் வேளையையும் வரத்தக்க காலத்தையும் அறிந்த பறவைகள் யாவை?

**07.** அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன் யார்?

**08.** ஒவ்வொருவரும் தமக்கடுத்தவனை ஏய்க்கிறார்கள் என வாசிப்பதெங்கே?

**09.** யானைத்தந்தத்தால் செய்யப்பட்ட வீடுகள் அழியும் என வாசிப்பதெங்கே?

**10.** வேசித்தனம் செய்ய பொருத்தனை நிறைவேற்றினேன் என்றது யார்?

## வினாவிடை - 64 சரியான பதில்கள்

01. ஏசாயா 30:20
02. கர்த்தர் - எரேமியா 15:6
03. லாமேக்கு - ஆதியாகமம் 5:3
04. எலிகூ - யோபு 32:6
05. ரோமர் 1:28
06. எஸ்றா - எஸ்றா 9:6,15
07. யாக்கோபு - இஸ்ரவேல் - ஆதி 32:28,35:10
08. 1பேதுரு 2:3
09. அபிகாயில் - 1சாமுவேல் 25:27,18,35
10. தாவீது - சங்கீதம் 37:25

# அன்லீன் ஆன்மீக விருந்து!

## கிறிஸ்துவுக்காய் மற்றவர்களுடைய சிந்தனையில் மாற்றத்தை உண்டு பண்ணும்

## கிறிஸ்தவ வாழ்க்கை முறை

கிறிஸ்துவுக்காக மற்றவர்களுடைய சிந்தனையில் மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய கிறிஸ்தவர்களாக நாம் வாழ வேண்டும். இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்த தேவனுடைய மனிதர்கள் வேதாகமத்தில் அனேகர் உண்டு. **எங்களுடைய வாழ்க்கை மூலம் அந்நியர்கள் கிறிஸ்து தான் தெய்வம் என்பதனை அறிந்து கொள்ளும்படியாய், தேவனுக்காக சாட்சிகளாய் மற்றவர்களுடைய வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை உண்டுபண்ணும்படியான வாழ்க்கை வாழ வேண்டும்.**

மற்றவர்களுக்கு முன்பாக என்னை மறுதலிப்பவனை நான் என் பிதாவுக்கு முன்பாக மறுதலிப்பேன் என்று இயேசு சொன்னார். கர்த்தர் சில நிபந்தனைகளை எங்களுக்கு தந்திருக்கின்றார், அவைகளை நிறைவேற்றாமல் போகின்ற போது அவர் எங்களை கைவிடுகின்ற நிலை வந்துவிடும்.

ஆகவே இரட்சிக்கப்பட்டு தேவனை அறிந்த நாம் அவருடைய நாமத்தை மறுதலிக்காத வாழ்க்கை வாழ வேண்டும். எங்களுடைய வார்த்தையால் இயேசுவே தெய்வம் என்று அறிக்கையிடுகிறது மட்டும் தான் மற்றவர்கள் மத்தியில் இயேசுவுக்குச் சாட்சியாயிருக்கின்றோம் என்று அறிக்கையிடு

வதல்ல. **எங்களுடைய முழு வாழ்க்கையும், எங்களுக்கு வருகின்ற எல்லா காரியங்களிலும் எப்படி முகங்கொடுக்கின்றோம் என்பது தான் இயேசுவுக்காய் சாட்சியாய் நிற்கின்றோம் என்பதனை காண்பிக்கும்.** அனுதினமும் நாம் சந்திக்கின்ற துன்பம், துயரங்கள் எல்லாவற்றிலும் சாட்சியாய் இருக்க வேண்டும். கிறிஸ்துவின் சார்பில் நிற்க வேண்டும். அப்போது தான் மற்றவர்களின் சிந்தனையில் எம் தேவனைப் பற்றிய நேரான சிந்தனையை உருவாக்க முடியும்.

**01. தேவனுடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் நிறைவேற்றும்படி பாடுகளைத் தொடர்ந்து சகிக்கின்ற போது மற்றவர்களில் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.**

**அப்போஸ்தலர் 28:1 நாங்கள் தப்பிக் கரைசேர்ந்தபின்பு, அந்தத் தீவின்பேர் மெலித்தா என்று அறிந்தோம்.** அப்போஸ்தலனாகிய பவுல் கொலை செய்தோ அல்லது வேறு பாவம் செய்தோ தப்பிப்போகவில்லை. மாறாக தேவனுக்காக அழைக்கப்பட்ட அந்தக் கணத்தில் இருந்து அவருடைய ஜீவன் பிரியும் வரைக்கும் கர்த்தருக்காக சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்தார். தேவனுக்காய் அவர் வைராக்கியமாய் வாழ்ந்த போது அனேகம் துன்பங்கள், துயரங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. அப்படி அதிகமான பாடுகள், வேதனைகள் வந்து, பொய்யான குற்றச்சாட்டுக்கள் அவருக்கு எதிராக வந்து ஒரு கைதியாக கடலிலே அவரைக் கொண்டு செல்கின்றார்கள். அங்கே மிகவும் அதிகமான வேதனைகள், புயல் காற்றுக்கள் எல்லாவற்றுக்கும் முகங்கொடுத்து அவருடைய ஜீவன் காக்கப்பட்டு தப்பிப் பிழைத்து கரைசேர்கின்றார்கள். அந்த தீவின் பெயர் மெலித்தா.

**அப்போஸ்தலர் 28:2 அந்நியராகிய அந்தத் தீவார் எங்களுக்குப் பாராட்டின அன்பு கொஞ்சமல்ல. அந்த வேளையிலே பிடித்திருந்த மழைக்காகவும் குளிருக்காகவும் அவர்கள் நெருப்பை மூட்டி, எங்கள் அனைவரையும் சேர்த்துக்கொண்டார்கள்.** அதிகமாக கடல் பிரயாணம் செய்து குளிராயிருந்தமையால் அவர்களுக்கு அனல் உண்டாக்க வேண்டும் என்று நெருப்பு மூட்டுகின்றார்கள். **அப்போஸ்தலர் 28:3-4 (3) பவுல் சில விறகுகளை வாரி அந்த நெருப்பின்மேல் போடுகையில், ஒரு விரியன்பாம்பு அனலுறைத்துப் புறப்பட்டு அவனுடைய கையைக் கவ்விக் கொண்டது. 4. விஷப்பூச்சி அவன் கையிலே தொங்குகிறதை அந்நியராகிய அந்தத் தீவார் கண்டபோது, இந்த மனுஷன் கொலைபாதகன், இதற்குச் சந்தேகமில்லை: இவன் சமுத்திரத்துக்குத் தப்பிவந்தும், பழியானது இவனைப் பிழைக்கவொட்டவில்லையென்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.** *சில பாம்புகள் கடித்து விட்டு உடனடியாக மறைந்து விடும். ஆனால் இந்தப் பாம்பு கடித்து பவுலுடைய கரத்திலே தொங்கிக் கொண்டிருந்தது.* அந்தத் தீவாரோ அந்நியர், தேவனை அறியாதவர்கள். ஆனால் பவுலோ தேவனடைய மனிதன். ஏற்கனவே அனேக பாடுகளை அனுபவித்தவர். மாத்திரமல்ல, கரைசேர்ந்த இடத்திலும் பாம்பு கடித்துவிட்டது. இப்பொழுது பவுலுக்கு

பாம்பு கடித்தவுடனே அவர்களுடைய மனதிலே ஒரு மாற்றம் வந்துவிட்டது.

இந்த மனுஷன் கொலை பாதகன், இவனுக்கு மீட்பே

இப்பொழுதும் இயேசு தான் இரட்சகர் என்பதனை நிரூபிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதனால் அவருக்கு ஒரு விரியன் பாம்பு தீண்ட வேண்டியிருந்தது.

இல்லை, இவன் தப்ப வேண்டும் என்று வந்தான்: ஆனால் பழியோ இவனை விடவில்லை என்றார்கள். இப்போதும் அனேகர் இவ்விதமாய் பேசுவார்கள். இவர் செய்த காரியத்திற்கு எழும்ப முடியாமல் கட்டிலிலே கிடக்கின்றார், முதல் செய்த அக்கிரமங்களுக்கு படுகின்றார் பாடு என்று தலை, வால், மூக்கு வைத்து பலவிதமாக பேசுவார்கள். கர்த்தருக்காய் உண்மையாய் வாழும் போது வரும் துக்கங்களை எல்லாரும் அறிந்து கொள்ளும் சந்தர்ப்பங்களும்ஏற்படலாம், தொடர்ச்சியான தாக்கங்கள் கூட ஏற்படலாம். விஷம் நிறைந்த வார்த்தைகள் கூட தாக்கலாம், பவுல் அந்தப் பாம்மை அந்த நெருப்பின் மேலே உதறி விட்டு இருந்தான். மற்றவர்கள் என்னை எப்படி நிந்தையாக பார்த்தாலும், எனக்கு அவமானம் வரும்படி பார்த்தாலும், இல்லாத காரியத்தை என் மீது சுமத்திவிட்டாலும், என் மேல் பொய் குற்றச்சாட்டைப் போட்டாலும் எனக்கு விரோதமாக எந்த சாட்சி சொன்னாலும் நான் அதை உதறிப்போட்டு அமைதியாக இருப்பேன் என்று சொல்லுங்கள்.

பவுலுடைய அழைப்பில் இருந்து பாடுகள் தான். இப்பொழுதும் இயேசு தான் இரட்சகர் என்பதனை நிரூபிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதனால் அவருக்கு ஒரு விரியன் தீண்ட வேண்டி இருந்தது. உண்மைகிறிஸ்தவர்களாக தேவனால் அழைக்கப்பட்டவர்களாக இருந்தால் எங்களுடைய வாழ்க்கையிலே வருகின்ற துன்பங்களையும், பாடுகளையும் குறித்து நாங்கள் முறுமுறுக்காமல், அதற்கு பதிலுக்குப் பதில் செய்யாமல் எங்களைக் குறித்து தப்பாக நினைக்கின்றார்களே என்று அதற்காக பொய் சொல்லித் திரியாமல் எப்படிப்பட்ட அவமானங்கள், நிந்தைகள் வந்தாலும் தேவனுடைய பிள்ளையாக இருந்தால் அதை சாதாரணமாக எண்ணி உதறிப் போட்டு இருப்பீர்கள். யாருடனும் வாக்குவாதங்களுக்குச் செல்லத்தேவையில்லை, என் வாழ்வில் வந்த இந்த துன்பமான நிலையினைக் கொண்டு உம் நாமம் மகிமைப்பட வாழுவேன் என உறுதி கொள்ளுங்கள்.

**அப்போஸ்தலர் 28:6 அவனுக்கு வீக்கங்கண்டு, அல்லது அவன் சடிதியாய் விழுந்து சாவானென்று அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள்: நெடுநேரமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தும், ஒரு சேதமும் அவனுக்கு வராததைக் கண்டபோது, வேறு சிந்தையாகி, இவன் தேவனென்று சொல்லிக்கொண்டார்கள்.** இவனுக்கு விஷம் தீண்டிவிட்டது. இப்பொழுது இவர் வீக்கங் கண்டு சாவார் என்று பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தால் யார் எப்படிப்பட்ட சிந்தையோடு, நோக்கத்தோடு

பார்த்தாலும் அழைக்கப்பட்டவர்கள், அர்ப்பணிக்கப்பட்ட பரிசுத்தவான்களே! உங்களுக்கு வருகின்ற எல்லாவற்றையும், மக்கள் உங்களை தீமையாய் பார்க்கின்ற பார்வைகளையும் பெரிதுபடுத்தாமல் அதை சாதாரணமாக விட்டு விடுங்கள். தேவன் உங்கள் சார்பில் செயலாற்றுவார். அவர்கள் பவுல் வீங்கி, சடுதியாய் விழுவார் என்று நெடுநேரமாய் பார்த்துக் கொண்டிருந்தார்கள். *ஆனால் சிலரோ மாதக் கணக்காக, வருடக்கணக்காக எப்படி விழுத்தலாம் என்று பார்த்துக் கொண்டிருப்பார்கள். சிலருடைய நற்பெயரைக் கெடுப்பதற்காக சிலர் பதுங்கியிருப்பார்கள், எப்பொழுது இவர் விழுவார் என்று எப்பொழுதும் அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.* நாங்கள் எப்பொழுதும் ஆண்டவருடைய பிள்ளைகளாக இருப்போம். அவர்கள் எப்பொழுதும் அதே கண்ணோட்டத்தோடு, பார்வையோடு, யோசனையோடு இருக்கட்டும். நாங்கள் அனுதினமும் நான் தேவனுடைய பிள்ளை, அவருக்காய் அர்ப்பணிக்கப்பட்டவன் என்ற சிந்தையோடு இருப்போம்.

**எங்களுடைய வேதனைகள் கூட மற்றவர்கள் மத்தியில் சிந்தனை மாற்றத்தை கொண்டு வரும். எங்களுக்கு வரும் பாடுகளை எப்படி சகிக்கிறோமோ அது மற்றவர்களுடைய சிந்தனைகளை மாறப் பண்ணும்.**

இந்த ஜனங்கள் பவுலை வீங்கிச் சாவான் என்று நெடுநேரமாய் எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில் ஒரு சேதமும் அவனுக்கு வரவில்லை. சில வேளைகளில் சில நிந்தைகளை, அவமானங்களை, கெட்ட பெயர்களை, தாங்க முடியாத வேதனைகளை கர்த்தர் நீண்ட நாட்களாக அனுமதித்தாலும் பொறுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் அதனால் ஆண்டவருக்கு நீடிய மகிமை உண்டாகப் போகின்றது. பவுல் சடுதியாய் விழுந்து சாவான் என்று பார்த்துக் கொண்டிருந்த ஜனங்களுக்கு மிகுந்த ஏமாற்றம், தடுமாற்றம்! என்ன இது!! என்ற கேள்வியும் உருவானது. இப்பொழுது அவர்கள் எதிர்பார்த்த எதிர்பார்ப்பு நடக்கவில்லை என்றவுடன் **அவர்கள் வேறு சிந்தையாகி...** என்று வேதம் சொல்கின்றது. **எங்களுடைய வேதனைகள் கூட மற்றவர்கள் மத்தியில் சிந்தனை மாற்றத்தை கொண்டு வரும். எங்களுக்கு வரும் பாடுகளை எப்படி சகிக்கிறோமோ அது மற்றவர்களுடைய சிந்தனைகளை மாறப் பண்ணும்.** பவுல் விஷம் தீண்டியும் சாகவில்லை என்றவுடன் அவன் தேவன் என்று நினைக்கின்றார்கள். அதை பவுல் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டார். பிற்பாடு அந்த தீவினுடைய முதலாளியின் தகப்பன் இரத்தபேதி வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கின்றான், பவுல் அவனுக்காக ஜெபிக்கின்றான், அங்கே சுகம் உண்டாகின்றது. பின்பு மற்றைய வியாதிக்காரர்களுக்காகவும் ஜெபிக்கிறார். அவர்களும் சுகமடைகின்றார்கள்.

**பவுல் எப்பொழுது சாவான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கள் இறுதியில் பவுலினிடமாக ஜெபிப்பதற்கு வந்தார்கள். இவன் செய்த பழி இவனை விடவில்லை என்று**

**நினைத்தவர்களுடைய சிந்தையில் ஒரு மாற்றம் வந்தது.** அந்தத் தீவில் பவுல் சில மாதங்கள் இருந்து ஊழியம் செய்து இயேசுவுக்கு சாட்சியாய் நின்று பெரிய மன மாற்றத்தை உண்டாக்கினார். **ஆண்டவர் எங்களை வசதியாக வைத்துக்கான் மற்றவர்களுடைய மனதிலே மாற்றத்தைக் கொண்டு வருவார் என்று நினைக்க வேண்டாம். எங்களுக்கு வருகின்ற வேதனைகளும், துன்பங்களும் தேவனுடைய அழைப் போடு சேர்ந்த ஒரு பகுதி.** நாம் மற்ற வர்களுடைய மனங்களில் பெரிய மாற்றத்தை கிறிஸ்துவுக்காக உண்டாக்க வேண்டுமானால் தேவனுடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் நிறைவேற்றுகின்ற போது, தொடர்ந்து வருகின்ற பாடுகளை சகிக்கின்ற போது, மற்றவர்களு டைய சிந்தையிலே, மனங்களிலே தேவனை நம்பும்படியான ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இதை உண்மையான ஒரு விசு வாசியாக வாழ்க்கையில் வாழ்ந்து காட்ட வேண்டும்.

பவுல் இரட்சிக்கப்பட முன்பு ஸ்தேவானுக்கு கல்லெறி யும் போது கூட இருந்தான். **அப்போஸ்தலர் 22:20 உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத் தம் சிந்தப்படுகிறபோது, நானும் அருகே நின்று, அவனைக் கொலை செய்வதற் குச் சம்மதித்து, அவனைக் கொலை செய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்ததையும், இவர் கள் அறிந்திருக்கிறார்களே என்றேன்.** இதைக் குறித்து வேத ஆராய்ச்சி யாளர்கள் இவ்விதமாய் கூறுகின் றார்கள்: பவுல் தன்னுடைய வாழ்க் கையின் இறுதிவரைக்கும் தேவனுக் காய் உறுதியாய் நிற்கத்தக்கதாக இருந்ததற்கு ஒரு காரணம்: தேவனு டைய அழைப்பு! மற்றது: ஸ்தே வான் கல்லெறியப்பட்டு மரித்த அந்தக் காரியம் பவுல் மரிக்கும் வரைக்கும் அவனுடைய கண்களுக்கு முன்ப தாக நின்றதாம். தூய்மை யான ஸ்தேவான், இயேசுவின் ஊழியன் கல்லெறியப்படுவதைப் பார்த்த பிற்பாடு அவனுடைய மனதிலே ஒரு ஏக்கம், மாற்றம். தேவனு டைய அழைப்பு பவுலு டைய வாழ்க்கையை விட்டு எடுபடாமல் இருந்ததற்குரிய முக்கிய தாக்கம், சகல ஜனங்களுக்கும் முன்பதாக ஸ்தேவான் துடித்து துடித்து இறந்ததும் அவன் சாகும் போது தேவனைப்பார்த்து கூறிய வார்த் தையும் பவுலுடைய வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத் தியது. **எங்களுடைய வாழ்க் கையில் வேதனையை உண்டுபண்ண வருகின்ற காரியம் எப்போதாவது ஒரு நாளைக்கு இன்னொருவரை ஆண்ட வரிடத்தில் உறுதியுள்ளவராக மாற்றும்.**

ஸ்தேவானுடைய அந்த சாட்சி பவுல் இயேசுவுக்காய் வைராக்கியம் பாராட்டுவதற்கு ஏதுவாக அமைந்தது. **மற்றவர்க ளுடைய வாழ்க்கை மாறுவதற்காய்,**

எங்களுடைய வாழ்க்கையில்
வேதனையை உண்டுபண்ண
வருகின்ற காரியம் எப்போதாவது
ஒரு நாளைக்கு இன்னொருவரை
ஆண்டவரிடத்தில்
உறுதியுள்ளவராக மாற்றும்.

**பாடுகளையும், துன்பங்களையும், வேதனைகளையும் சகித்தே தீர வேண்டும். அதற்கு முகங்கொடுக்கின்ற அளவைப் பொறுத்துதுத்தான் நாங்கள் ஆண்டவருடைய நாமத்திற்கு மகிமையைக் கொண்டுவர முடியும்.** தேவனுடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் நிறைவேற்றும்படி பாடுகளை தொடர்ந்து சகிக்கின்ற போது மற்றவர்களுடைய வாழ்க்கையில் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்த முடியும். பவுல் அதனைத் தான் செய்து கொண்டு வந்தார்.

**02. கர்த்தர் சொன்னபடி செய்து கர்த்தரின் வல்லமைக்கு சாட்சியாய் நிற்கும் போது மற்றவர்களில் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.**

**யாத்திராகமம் 8:18-19 (18.) மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் பேன்களைப் பிறப்பிக்கும்படிப் பிரயத்தனஞ்செய்தார்கள்: செய்தும், அவர்களால் கூடாமற் போயிற்று: பேன்கள் மனிதர்மேலும் மிருகஜீவன்கள்மேலும் இருந்தது. 19. அப்பொழுது மந்திரவாதிகள் பார்வோனை நோக்கி: இது தேவனுடைய விரல் என்றார்கள்.** ஆரம்பத்தில் மோசே செய்த அதே அற்புதத்தை எகிப்தின் மந்திரவாதிகள் செய்தார்கள் ஆண்டவர்மோசேயை அனுப்பி நான் உன்னை எகிப்துக்கு அழைத்து அங்கிருக்கின்ற என்னுடைய ஜனங்களை மீட்டுக் கொண்டு வரவேண்டும் என்று சொன்னார். அதற்கு மோசே: நான் திக்குவாயன், என்னால் சரியாக கதைக்க முடியாது? என்றான். அதற்கு ஆண்டவர்:

***"மோசே கோலைப் போட அது பாம்பாக மாறியது: மந்திரவாதிகளும் போட்டார்கள், அவைகளும் பாம்பாக மாறின.***

இல்லை நீ தான் செல்ல வேண்டும் என்று சொல்லி ஆரோனுடன் செல்லும்படி அனுப்புகின்றார். மோசேயும் ஆண்டவருடைய சொல்லைக் கேட்டு அங்கு சென்றான்.

பார்வோனுக்கு முன்பாக நிற்கும் போது என்னுடைய வல்லமையை காண்பிக்கும்படி இந்தக் கோலை அவனுக்கு முன்பாக தரையிலே போடு என்றார். மோசேயும் பார்வோனுக்கு முன்பாக அந்தக் கோலைத் தரையிலே போட்ட போது அது பாம்பாக மாறியது. பார்வோன் தன்னுடைய மந்திரவாதிகளைக் கொண்டும் அவர்களுடைய கோல்களைப் போட்ட போது அவையும் பாம்புகளாக மாறியது. மோசே கோலைப் போட அது பாம்பாக மாறியது: மந்திரவாதிகளும் போட்டார்கள், அவைகளும் பாம்பாக மாறின. **யாத்திராகமம் 7:11-12** *நாங்களாக இருந்தால் ஆண்டவரே போதும், இனி செல்வதாக இருந்தால் வேறு யாரையும் பார்த்துக் கொள்ளும் நான் செய்ததை அவர்களும் செய்கின்றார்கள், எனது மானமே போய்விட்டது, உம்மை நம்பிச் சென்றேனே, ஏன் இப்படிச் செய்தீர்? இனி நீர் என்ன சொன்னாலும் நான் போகமாட்டேன் என்று அழைப்பை, ஊழியங்களை, அர்ப்பணிப்பை மறந்துவிடுவோம்.*

**நீங்களும் உங்களுடைய வாழ்க்கையில் கர்த்தர் சொல்வதைக் கேட்டு தொடர்ந்து செய்து கொண்டே இருங்கள். ஒரு கட்டத்தில் பிசாசு தோற்றுப்போய்விடுவான்.**

தேவன் திரும்பவும், நீ சென்று எகிப்தின் தண்ணீரை இரத்தமாக்கும்படி சொன்னார். அதை மோசே செய்தார்: எகிப்தியரும தண்ணீரை இரத்தமாக்கினார்கள். **யாத்திராகமம் 7:20-22** மூன்றாவதாக, எகிப்து தேசமெங்கும் தவளைகளை வரும் படி செய் என தேவன் மோசேக்கு சொன்னார். மோசேயும் தவளை கள் வரும்படி செய்தார்: எகிப்தின் மந்திரவாதிகளும் தவளைகள் வரும்படி செய்தனர். **யாத்திராகமம் 8:6-7** ஆனால் மோசே தளர்ந்து போகவில்லை. ஆண்டவர் சொல்லச் சொல்ல மோசே கீழ்ப்படிந்து சென்றான். ஒரு கட்டத்தில் மோசே செய்த அற்புதத்தை மந்திரவாதிகளால் செய்ய முடியவில்லை. **உங்களுடைய வாழ்க்கையில் கர்த்தர் சொல்வதைக் கேட்டு தொடர்ந்து செய்து கொண்டே இருங்கள். ஒரு கட்டத்தில் பிசாசு தோற்றுப் போய்விடுவான்.** தேவன் சொல்லச் சொல்ல தேவனுடைய வார்த்தையை நிறை வேற்றிக் கொண்டிருப்பீர்களாக இருந்தால் அவர்கள் எப்படிப்பட்ட நபர்களாக இருந்தாலும் அவர்களுடைய சிந்தனையில் மாற்றம் வரும். தேவன் தான் வல்லமையுள்ளவர், அவருக்கு மேலாக ஒரு வல்லமையும் இல்லை, அவர் தான் அதிகாரமுள்ளவர் என்பதனை கண்டு கொள்வார்கள்.

**நாம் தேவனுடைய வார்த்தையின் படி தொடர்ந்து நடக்கின்ற போது ஒரு நாள் மற்றவர்கள் தேவனுடைய வல்லமையை ஏற்றுக் கொள்வார்கள். மந்திரவாதிகள் அது தேவனுடைய விரல் என்பதனை கண்டு கொண்டார்கள்.** வாழ்க்கையில் சோர்வுகள் வரலாம், நம்பிக்கையீனங்கள் வந்திருக்கலாம். மோசேக்கும் சோர்வு வந்திருக்கலாம், நம்பிக்கையீனம் ஏற்பட்டிருக்கலாம் ஆனால் தேவன் சொன்னதை தொடர்ந்து அவன் செய்தான். ஒரு கட்டத்தில் மந்திரவாதிகள் அது தேவனுடைய விரல்என்று அறிக்கையிட்டார்கள்.

கர்த்தர் ஆசீர்வதித்தாலென்ன: ஆசீர்வதிக்காவிட்டாலென்ன, அவர்தான் தேவன் என்று அவருடைய வார்த்தையைக் கைக்கொள்கின்ற போது அவர் மிகப் பெரிய காரியத்தை செய்வார். ***உங்களுடைய குறைவைக் கண்டு ஏங்குகின்றீர்களா? நீண்ட நாட்கள் ஜெபம் பண்ணியும் பதில் வராமல் சோர்ந்து போனீர்களா? முக்கியமான தேவை சந்திக்கப்படவில்லையா? நீர் என்னுடைய ஜெபத்தைக் கேட்கின்றவர் என்றெண்ணி காத்திருந்து அனேக வருடங்கள் சென்றுவிட்டதே? என்னை ஏன் கைவிட்டீர் என்று சிந்திக்கின்றீர்களா?*** தேவனை இன்னும் அதிகமாக நம்புங்கள், உறுதியாய் பற்றிக் கொள்ளுங்கள். ஒரு நாள் வரும்: தன்னுடைய ஆசீர்வதிக்கும் கரத்தினாலே உங்களை அவர் ஆசீர்வதிப்பார். உங்களை மூடியிருக்கின்ற நிந்தனைகளை எடுத்து போடுவார். **இறுதிவரைக்கும் ஆண்டவர்**

வார்த்தையைக் கடைப்பிடித்து சாட்சி யாய் இருக்கின்ற போது மற்றவர்களு டைய மனங்களிலே மாற்றக்கைக் கொண்டு வரமுடியும்.

**03. மிகப்பெரிய ஆபத்துக்கள்: பயங்கரங்களை தேவனுடைய நாமத்தினாலே மேற்கொள்கின்ற போது பெரிய சிந்தனை மாற்றத்தை அந்நியர்கள் மத்தியில் உண்டாக்க முடியும்.**

தானியேல் 6:25-26 (25.) பின்பு ராஜாவாகிய தரியு தேசமெங்கும் குடியிருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஜாதியாருக்கும் பாஷைக்காரருக்கும் எழுதினது என்னவென்றால்: உங்களுக் குச் சமாதானம் பெருகக்கடவது. 26. என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்கு முள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப் படவேண்டுமென்று என்னாலே தீர்மானம் பண்ணப்படுகிறது: அவர் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்: அவருடைய ராஜ் யம் அழியாதது: அவருடைய கர்த்தத் துவம் முடிவுபரியந்தமும் நிற்கும். தரியு ராஜாவிடம் இருந்து ஒரு கட் டளை பிறந்தது: எல்லா விண்ணப் பங்களும், ஜெபங் களும் ராஜாவிடம் தான் செய்யப்பட வேண்டும் என்ற கட்டளை பிறந் தது. ஆனால் தானி யேல்தேவனுடைய பிள்ளை, யூதாவில் இருந்து கைதியாக கொண்டு வரப் பட்டவன், அவன் எருசலேம் பக்க மாய் பலகணிகளைத் திறந்து தேவ னிடம் விண்ணப்பம் செய்கின் றான். தானியேல் மேல் குற்றம் சுமத்த வேண்டும் என்றிருந்தவர் கள் அதனை ராஜாவுக்கு சொல் கின்றார்கள். இறுதியில் தானியேல் சிங்கக் கெபியில் போடப்பட வேண்டும் என்ற தீர்ப்பு வழங்கப் படுகின்றது. அது மிகவும் பயங்கர மானது. **உயிரா? தேவனா? என்ற ஒரு போராட்டம். ஆனால் அவன் ஆண்ட வருக்காய் அதனை ஏற்றுக் கொண் டான்.** நாங்கள் போய் சாக வேண் டும் என்று நான் சொல்ல வில்லை, கர்த்தருடைய நாமத்திற்கு மகி மையை கொண்டு வரத்தக்க தாக எப்படி அதிகமாய் வாழ முடி யுமோ அவ்வளவு வாழ வேண்டும்.

**தேவனுடைய நாமத்திற்காய் எதை எல்லாம் இழக்க முடியாதென்று இருக்கின்றோமோ அதை எல்லாம் இழக்கத் தயாராக இருக்க வேண்டும். தானியேலைப் பார்த்த தரியு ராஜாவின் இருதயத்தில், சிந்தையில் ஒரு மாற்றம்.** பிற்பாடு ராஜா தானி யேலின் தேவனே தேவன்! என்று சொல்கின் றான். அப்படி ராஜா சொல் வதற்கு தானியேல் கொடுத்த விலை கொஞ் சமல்ல: அவன் தன் னுடைய ஜீவனையே அதற்கு ஈடாக வைத்தான். *அற்ப சொற்ப காரியங்களுக் கெல்லாம் தேவனுடைய நாமத்தின் மகிமையைக் கெடுக்கக் கூடாது. தேவை யில்லாத ஒன்றை பெற வேண்டும் என்பதற்காக தேவனை மறுதலிக்கக் கூடாது. எங்களுக்கு அவசியமில்லாத ஒன்றுக்காய்*

**தேவனுடைய நாமத்திற்காய் எதை எல்லாம் இழக்க முடியாதென்று இருக்கின்றோமோ அதை எல்லாம் இழக்கத் தயாராக இருக்க வேண்டும். தானியேலைப் பார்த்த தரியு ராஜாவின் இருதயத்தில், சிந்தையில் ஒரு மாற்றம்.**

*தேவனுடைய நாமத்தை தூசிக்கக்கூடாது. அழிந்து போகின்ற உலக காரியத்திற்காய், பொருளுக்காய் ஏதோ ஒரு நன்மைக்காய் அழியாமையுள்ள தேவனுடைய நாமத்தை இந்தப் பூமியிலே மறுதலிக்கக்கூடாது.* என்னுடைய உயிர் போனாலும் பரவாயில்லை நான் ஆராதிக்கின்ற தேவன் தான் என்னுடைய ஜெபத்தைக் கேட்கின்றவர் என்பது தானியேலுக்கு தெரியும். அவர் தான் ஜீவனோடிருக்கின்றவர் என்று தானியேலுக்குத் தெரியும்.

அதனால் அவன் சிங்கக் கெபியிலே போடப்படுவதற்கும் தயாராக இருந்தான். **எங்களுடைய வாழ்க்கையில் வருகின்ற எந்தப் பெரிய ஆபத்துக்களையும் பயங்கரங்களையும் தேவனுடைய நாமத்தினாலே மேற்கொள்ளும்படியான ஒரு வாழ்வுக்காக எங்களை அர்ப்பணிக்க வேண்டும்.** உங்களை நோக்கி எந்த பெரிய ஆபத்து வந்தாலும் தேவனால் அவைகளை மேற்கொள்ள முயற்சிக்கின்ற போது ஒரு நாள் நீங்கள் கடந்து வந்த ஆபத்துக்களைப் பார்த்து மற்றவர்களுடைய சிந்தையிலே ஒரு மாற்றம் உருவாகும். **ஏற்கனவே கட்டளை கொடுத்த ராஜாவே தன்னுடைய கட்டளையை மாற்றி: தானியேலுடைய தேவனே தேவன் என்கின்றான்.** நாங்கள் ஒவ்வொரு

> நாங்கள் ஒவ்வொருவரும் வெளியே அழகாய் இருக்கின்றோம், ஆனால் உள்ளுக்குள்ளே தேவனுக்காய் நிற்கத்தக்க சாட்சிகளாய் இருக்கின்றோமா?

வரும் வெளியே அழகாய் இருக்கின்றோம், ஆனால் உள்ளுக்குள்ளே தேவனுக்காய் நிற்கத்தக்க சாட்சிகளாய் இருக்கின்றோமா? தானியேல் சொல்கின்றார்: **தானியேல் 6:22 சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்: அதேனென்றால் அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன்: ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிகேடு செய்ததில்லை என்றான்.** நாம் பெரிய காரியங்களை எதிர்பார்க்கலாம். ஆனால் குற்றமற்ற வாழ்க்கை வாழ வேண்டும். பாவத்தை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான் என்று வேதம் சொல்கின்றது. பெரிய ஆபத்துக்கு முகங்கொடுத்து தரியு ராஜாவின் சிந்தையில் ஒரு மாற்றத்தை தானியேல் உண்டாக்கினார்.

## 04. பரிசுத்தமாய் வாழ்ந்து பரிசுத்தமாய் தங்கள் ஆவியை ஒப்புக் கொடுக்கிறவர்கள் மற்றவர்களுடைய சிந்தையிலே மாற்றத்தை கொண்டு வரமுடியும்.

**மத்தேயு 27:54 நூற்றுக்கு அதிபதியும், அவனோடேகூட இயேசுவைக் காவல்காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து: மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள். மாற்கு 15:39 அவருக்கு எதிரே நின்ற நூற்றுக்கு அதிபதி அவர் இப்படிக் கூப்பிட்டு ஜீவனை விட்டதைக் கண்டபோது: மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன் என்றான்.** இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்கும் போது இறுதியான வார்த்தை

யாக: பிதாவே என் ஆவியை உம்முடைய கரத்தில் ஒப்புக் கொடுக்கிறேன் என்றார். பரிசுத்தவான்களுடைய மரணத்தினால் அனேகருடைய சிந்தனைகள் மாறும். தூய்மையாய் வாழ்ந்து தூய்மையாய் மரித்தவர்களைக் குறித்து இன்றைக்கும் பேசுகின்றார்கள். இயேசு தன்னுடைய வாழ்க்கையில் பெத்லகேமில் பிறந்ததில் இருந்து மரிக்கும் வரைக்கும் பிதாவுக்கு சாட்சியாய் இருந்தார். **இயேசுவும் சிறு வயதில் எங்களைப் போன்று கஸ்டப்பட்டார். அகதியாக எகிப்திற்கு கொண்டு செல்லப்பட்டார். பிற்பாடு நாசரேத்துக்கு கொண்டு வரப்பட்டார். தகப்பன் தச்சு வேலை செய்தார். அவரோடு தானும் தன்னுடைய சிறுவயதில் தகப்பனோடு சேர்ந்து அந்த தொழிலைச் செய்திருக்கலாம்.** பெற்றோருக்கு கீழ்ப்படிந்து அடங்கி இருந்தார். **லூக்கா 2:51**

அவர் துன்பத்தின் பாதைக் கூடாகவே சென்றார். மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை என்று இயேசு கூறினார். **இறுதியில் அவரைப் பேய் பிடித்தவர் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் அவர் தன்னுடைய வாழ்க்கையில் பரிசுத்தமாய் வாழ்ந்து, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி என்ன நோக்கத்திற்காய் வந்தாரோ அதை நிறைவேற்றி சிலுவையில் ஜீவனை விட்ட போது அவரை அடித்தவர்கள், குத்தியவர்களுடைய சிந்தனையில் மாற்றம் வந்தது.** இவர் மெய்யாகவே தேவனுடைய குமாரன் என்றார்கள். தேவனைக் குறித்து மற்றவர்கள் காண வேண்டுமானால் வாழ்க்கையில் நாம் சாகும் வரைக்கும் சாட்சியைக் காத்து வாழ வேண்டும் அப்பொழுது தேவனை அறியாதவர்கள் இவர்கள் ஆராதிக்கின்ற ஆண்டவர் தான் உண்மையான ஆண்டவர் என்று அறிக்கை செய்வார்கள். அனேக பரிசுத்தவான்கள் எப்போதோ மரித்து விட்டார்கள், ஆனால் அவர்களுடைய சாட்சி வாழ்க்கையைப் பார்த்து இவர்கள் கர்த்தருக்காய் உறுதியாய் நின்றவர்கள் என்று அறிக்கையிடுகின்றார்கள். சில பரிசுத்தவான்களுடைய வாழ்க்கை சரிதைகளை வாசிக்கிறவர்களுடைய சிந்தையில் மாற்றம் ஏற்படுகின்றது. சாதாரண வாழ்க்கை வாழ்ந்து விட்டு போவோம் என்று சிந்திக்காமல், பரிசுத்தமாய் தூய்மையாய் வாழ்ந்து ஒரு உண்மையுள்ள விசுவாசியாய் மரித்தால் ஒரு நாள் உங்களையும் மக்கள் முன்மாதிரியாகக் கொள்வார்கள். எப்படி என்றால் இந்த நபர் ஆராதித்த தேவன் தான் உண்மையான தேவன் என்று சொல்லப்படும்.

**மரிக்கும் வரைக்கும்
பரிசுத்தத்தைக் காத்து நடந்து
பரிசுத்தமாய் மரிக்கும் போது
எமது வாழ்வும் தேவனுக் காக
ஏதோ ஒன்றை இவ்வுலகில்
எழுதிவிட்டுச் செல்லும்.**

**இயேசுவைப் பார்த்து அங்கிருந்தவர்கள் இவர் மெய்யாகவே தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுகின்றார்கள். அதற்கு இயேசு கிறிஸ்து தன்னுடைய ஜீவனையே கொடுக்க வேண்டியிருந்தது.** பவுல் எழுதிய எத்தனையோ நிருபங்கள் இன்றும் எம்மை தேவனுக் குள் நடத்துகின்றது. ஏன் அவர் பரிசுத்தமாய் வாழ்ந்து பரிசுத்தமாய் மரித்தபடியால் அவர் எழுதியவைகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அனேகருடைய சிந்தனையில் தேவனுக்காக வாழ வேணடும் என்ற மாற்றத்தை உண்டு பண்ணுகிறது. மரிக்கும் வரைக்கும் பரிசுத்தத்தைக் காத்து நடத்து பரிசுத்தமாய் மரிக்கும் போது எமது

வாழ்வும் தேவனுக்காக ஏதோ ஒன்றை இவ்வுலகில் எழுதி விட்டுச் செல்லும். அது மற்றவர்களின் சிந்ததனையில் தேவனைப் பற்றி சிந்திக்கத் தூண்டும். இயேசு தெய்வம் இல்லை என்று சொன்னவர்கள் உங்களுடைய வாழ்க்கையைப் பார்த்து அவர் தான் தேவன் என்று அறிக்கையிட்டு வர வேண்டும்.

## 05. பரிசுத்த ஆவியால் நிறைந்த வாழ்வு வாழ்கின்றவர்கள் மற்றவர்களுடைய வாழ்க்கையில் மாற்றத்தை உண்டுபண்ண முடியும்.

**மத்தேயு 4ஆம் அதிகாரம்.**

இயேசு ஊழியத்திற்கு வந்த போது ஆவியின் பெலத்தினால் வந்தார். அவரைப் பார்த்து இவர் யோசேப்பின் குமரான் அல்லவா? இவர் சகோதரர்கள் எங்களிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? ஆனால் இவர் இப்படியெல்லாம் செய்கின்றாரே? என்று அவர்களுடைய இருண்டு கிடந்த சிந்தனையில் ஒரு வெளிச்சம் உண்டானது. **ஆவியினாலே என்னை நிரப்பும், அபிஷேகியும் என்று தாகத்தோடு கேட்டு வாழ்கின்ற வாழ்க்கை வாழ்கின்றவர்கள் மற்றவர்களுடைய மனதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.** பவுல், ஸ்தேவான் போன்றோர் ஆவியினால் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து மற்றவர்களுடைய மனதில் மாற்றத்தை உண்டாக்கினார்கள்.

***சார்லஸ் பின்னி என்ற தேவனுடைய மனிதன் ஆவியினாலே நிறைந்த ஒரு மனிதன். அவர் ஒரு இடத்திற்கு சென்றால் அவருக்கு அருகில் நிற்பவர்கள் கண்ணீர் விட்டு கதறி அழுவார்கள். அது அவரை நிறைத்திருந்த ஆவியானவருடைய செயல். ஆவியினாலே நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தால் மற்றவர்களுடைய சிந்தையில் ஒரு மாற்றம் ஏற்படும். அவர் ஒரு தொழிற்சாலைக்குள் சென்றார். அந்த தொழிற்சாலையை தேவ பிரசன்னம் நிரம்பியது. தொழிலாளர்களெல்லாம் தங்களுடைய வேலைகளையெல்லாம் விட்டு கதறி அழுது பாவ உணர்வடைந்தவர்களாம்.*** இது தான் பரிசுத்த ஆவியினால் நிறைந்த வாழ்க்கை. நாம் பரிசுத்த ஆவியினால் நிறைந்து நடந்தால் எங்களுடைய வாழ்க்கையும் மற்றவர்களுடைய சிந்தையில் மாற்றத்தை உண்டுபண்ணும். **நீங்கள் ஆவியினால் நிறைந்து வாழ்ந்தால் நீங்கள் சந்தோஷமாய், மகிழ்ச்சியாய் இருப்பதற்கு என்ன காரணம் என்று கேட்பார்கள்: அப்பொழுது சந்தோஷத்திற்கு காரணரான இயேசுவை அவர்களுக்கு சொல்ல முடியும்.** ஆவியினால் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து மற்றவர்களிற்காய் ஜெபிக்கும் போது வியாதிகளைக் குணப்படுத்துவார். குற்ற உணர்வடைவார்கள், பாவ அறிக்கை செய்வார்கள். மற்றவர்களின் நன்மைக்காக ஒரு மெழுகுவர்த்தி போல ஆவியினால் நிறைந்து வெளிச்சம் கொடுக்க வேண்டும். உடைகளைப் பாதுகாக்கின்ற பூச்சிக்கட்டியைப் போல அடுத்தவர்களின் இரட்சிப்பைக் காத்துக் கொள்வதற்காகவும் வாழ வேண்டும். அடுத்தவர்கள் தேவனை நம்புவதற்காக ஒரு உண்மையான சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்துவோம். பரிசுத்த ஆவியானவரினால் நிறைந்த வாழ்வு வாழ்ந்து மற்றவர்கள் மத்தியில் ஓர் மனமாற்றத்தை, சிந்தனை மாற்றத்தை கிறிஸ்துவுக்காக ஏற்படுத்துவோம்.

**"ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக"**

**போதகர் V.மகாராஜா**

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 140.00 Per Year |
| இந்தியா | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்

## சந்தா கூப்பன்

பெயர் : – ..........................................

விலாசம் : – ..........................................

..........................................

..........................................

..........................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

Zion Church Office,
No. 347, Navalar Road,
Jaffna, Srilanka.

To: [illegible]
[illegible]
[illegible]
[illegible]